குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40 )( ரௌத்திரி ஆண்டு தைத்திங்கள் 10—2—81 )( இதழ் 3



புள்ளிருக்கு வேளூர் தைச்செவ்வாய்த் திருவிழாவில்

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி பஷ்பக்கேரிக் பவனி வருதல்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

முன்னை மலமகற்றி
மூதறிவா நந்தமயந்
தன்னை யறிந்த
தபோதனருள் — என்னையுநீ
ஆண்டுபரிச் சொக்கநா
தாந்தமருள் கூடலிலே
தாண்டுபரிச் சொக்கநாதா.

— சொக்கநாத வெண்பா 73


ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.


குருபாதம்

# "ஞானசம்பந்தம்"


தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40 | 10-2-81 | இதழ் 3


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | கிழக்கும் – மேற்கும் | 97 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அருளுரை | 101 |
| 3 | நுனிக்கொம்பில் இருந்து அடிமரத்தை வெட்டலாமா? ... | 104 |
| 4 | மரத்தை வெட்டாதீர் | 111 |
| 5 | மனித உடலில் தங்கம் | 112 |
| 6 | திருப்புகலூர், திருப்புகலூர்வர்த்த மானிச்சரம் தலச் சிறப்புக்கள் ... | 113 |
| 7 | அபிராமி அந்தாதி ... | 118 |
| 8 | திருக்குறுக்கை ... | 124 |
| 9 | ஓமம் ( Ajowan ) ... | 129 |
| 10 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் நெறி விளக்கம் ... | 130 |
| 11 | செய்திகள் ... | 132 |
| 12 | கடிதம் ... | 139 |
| 13 | எதிர்காலம் ... | 140 |



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 18.

ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 40 | ரௌத்திரி - தை - 10—2—81 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## கிழக்கும் – மேற்கும்

### புனித உரையாடல்

அமெரிக்கநாட்டு, ஹவாய்த்தீவுகளைச் சார்ந்த, கப்பா 'சைவ சித்தாந்த சர்ச்' ஸ்தாபகர் தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகள் தமது சீடர்களுடனும், அமெரிக்கநாட்டுச் சைவ அன்பர்களுடனும் அண்மையில் நமது தருமை ஆதீனத்தைக்காணவும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசிக்கவும் வந்திருந்தார்கள். இக்குழுவினர் தருமையில் சிறப்பாக வரவேற்கப்பெற்றனர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தோடு சுவாமிகள் நீண்ட உரையாடல் நிகழ்த்தினார்கள். பல்வேறு செய்திகள் பரிமாறிக் கொள்ளப்பெற்றன. கீழைநாடுகளின்சமயச்சிந்தனைகளும், மேலைநாடுகளின்சமயச்சிந்தனைகளும் உரையாடலில் சிறப்பிடம்பெற்றன. இந்நாடுகளில் இன்றுள்ள மக்கள்நிலை, சமூக எண்ணங்கள், குடும்பவாழ்வு, சமயச்சூழ்நிலை

முதலியனபற்றி உரையாடல் விரிந்தது. சுவாமிகள் சிந்தனைக்குரிய பல்வேறு செய்திகளைத் தெரிவித்தார்கள். இன்றைய நிலையில் அனைவரும் சிந்திக்கவேண்டிய பல்வேறு சிக்கல்கள் வெளியாயின.

## சுப்பிரமணிய சுவாமிகள்

தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகள் பிறப்பால் அமெரிக்கநாட்டு ஹவாய்த்தீவைச் சார்ந்த வெள்ளையர். அமெரிக்கநாட்டு நடனக் கலைஞர். கிறித்துவ மதத்தினர். ஒருமுறை இலங்கைக்குச் சென்றிருந்தகாலை அங்கே வாழ்ந்திருந்த சைவ-சமயத்தைச்சார்ந்த 'யோக சுவாமிகள்' என்பவர்களால் சைவத்திற்கு ஈர்க்கப் பெற்றவர்கள். துறவுநெறி பூண்டு, காவியுடையுடன், திருநீறு, உருத்திராக்கம் துலங்கத் திகழ்கிறார்கள். ஹவாய்த்தீவுகளைச் சார்ந்த 'கப்பா' என்ற இடத்தில் 'சைவ - சித்தாந்த சர்ச்' என்ற திருக்கோயில் அமைத்து சிவலிங்கம், அம்மை, விநாயகர், முருகன் முதலிய திருமேனிகளை எழுந்தருளச்செய்துள்ளார்கள். திருக்குறளையும், திருமந்திரத்தையும் அடிப்படையாகக்கொண்டு அமெரிக்கநாட்டில் சைவப்பயிர் வளர்த்து வருகிறார்கள். சமயஞ்சார்ந்த பல வெளியீடுகளை ஆங்கிலத்தில் வெளியிட்டுவரும் சுவாமிகள் 'சைவ - சித்தாந்தமே' உலகை ஒரு நாள் வெற்றி கொள்ளும் எனத் திடமாக நம்புகிறார்கள். அமெரிக்க இந்தியக் குடும்பங்கள்பல இவர்களால் பெரிதும் ஈர்க்கப்பெற்றுள்ளன. சமயம்பற்றிய சுவாமிகளின் சில சிந்தனைகள் பெரிதும் சிந்திக்கத் தக்கன.

## முறையான திட்டமிடவேண்டும்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தோடு சுவாமிகள் உரையாடியபோது ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். அமெரிக்கநாட்டில் தற்போது தற்கொலை, மணமுறிவு, அமைதியற்ற குடும்பநிலை முதலியன நிகழ்வதாகவும், குறிப்பாக இத்தகைய அமைதியற்றவாழ்க்கையைச் சீர்திருத்தத்தக்க நல்லறிஞர் குடும்பங்களை அனுப்பிவைத்து உதவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். துறவிகள் சைவ - சமயத்திலிருந்து வந்தாலும், குடும்பவாழ்வில் தங்கியிருக்கும் சைவ - சமய மத போதகர்கள் அமெரிக்காவிற்குவந்தாலும், குடும்பங்களோடு உறவாடி, அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்க உதவக் கேட்டுக்கொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தக்கவர்களோடு ஆராய்ந்து இதுபற்றி உரிய ஏற்பாடுகள் செய்வதாக உறுதிமொழி வழங்கினார்கள். தற்போதே தமிழகத்தில் இவ்வாறு வெளிநாடுகளில் சென்று பிரசாரம் செய்யத்தக்க தகுதியுடையோர் பலர் உள்ளனர். ஆனால் இத்தகையோர் பெரும்பாலும் அறுபது வயதினைத் தாண்டியவர்களாகவே

உள்ளனர். இவர்களை அனுப்பினால் எழுச்சியோடு பன்னாள் பணியாற்ற இயலுமா என்பது சிந்திக்கத்தக்கதாக உள்ளது. எனவே இளைஞர்களை இவ்வாறான துறையில் முறையாகத் திட்டமிட்டு உருவாக்க ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளங்கொண்டுள்ளார்கள்.

## தகுதிகள் என்ன?

ஆங்கிலம் – அல்லது தமிழ் இலக்கியங்களில் பட்டதாரிகளாக இருக்கும் இளைஞர்களை இத்துறையில் பயன்படுத்தத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. இவர்கள் சைவ – சமயத்திலும் சைவப்பண்பாட்டிலும் ஈடுபாடு உடையவர்களாக இருத்தல்வேண்டும். தொழில் மனப்பான்மையின்றித் தொண்டு மனப்பான்மை உடையவர்களாக இருத்தல்வேண்டும். ஆங்கிலம் மற்றும் தமிழில் நன்கு பேசும் திறமும் எழுதும் திறமும் பெற்றிருக்கவேண்டும். சமய உணர்வும் சைவ உணவும் உடையவர்களாக இருத்தல்வேண்டும். இத்தகைய இளைஞர்களில் பன்னிரண்டுபேரைத் தேர்ந்தெடுத்துத் தருமையாதீனம் இவர்களுக்கு முறையான பயிற்சிதரவிருக்கிறது. பயிற்சிக் காலம் இரண்டு அல்லது மூன்றாண்டுகள் இருக்கலாம். அக்காலத்தில் உணவு–உறையுள் முதலியன இலவசமாக வழங்கப்பெறும். பல்வேறு துறைகளில் இவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல சமய போதகர்களாக விளங்கும் வகையில் இப்பயிற்சி அமையும். பயிற்சிபெற்றுப் பணி மேற்கொள்ளும்போது ஒவ்வொருவருக்கும் தொழிலூதியமாக இல்லாமல் தொண்டுதியம் மாதாமாதம் வழங்கப் பெறும்.

## பாடத்திட்டங்கள் ஒருபார்வை

இந்துசமயத்தின் அடிப்படையாக விளங்கும் வேதம், உபநிடதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறை, சாத்திரங்கள் இவைபற்றிய அறிமுகங்களும் – சில அடிப்படைகளும் இக்கல்வித் திட்டத்தில் அமையும். இந்திய சமயங்கள் - இவற்றின் வரலாறுகள் போதிக்கப் படும். கோயில் – சமயவழிபாட்டு நெறிமுறைகள் – சமயவிழாக்கள்– சமயநூல்கள் இவற்றில் இவர்கள் தரமான பொது அறிவு பெற்றிருக்க வேண்டும். கீழை மற்றும் மேலைநாட்டுச் சமயவரலாற்று அறிவோடு, தற்போது இந்நாடுகளில் வாழும் மக்களின் சமயம்பற்றிய மதிப்பீடுகள் இவர்களுக்கு அறிவுறுத்தப்படவேண்டும். உலக சமயங்கள் இவற்றின் ஆதிக்கம் அல்லது வீழ்ச்சிபற்றி இவர்கள்கற்பதும்தேவை.

தமிழில் திருமுறை – சாத்திரம் முதலியவற்ருேடு உரிய நல்லொழுக்க நூல்களையும் இவர்கள் கற்பது இன்றியமையாதது. இவ்வாருன பயிற்சி பெற்றவர்களுக்கு, உரிய சான்றிதழ் வழங்கிப் பின்னர் உள்நாட்டில் சிலகாலம் பயிற்சியளித்துப் பின்னர் வெளிநாடுகளுக்கு இவர்கள் சமயபோதகர்களாக ஆதீனச்சார்பில் இயங்கிவரும் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் பணிமன்றத்தின் வாயிலாக அனுப்பிவைக்கப் பெறுவார்கள். இவர்களை விரும்பி வரவேற்கும் வெளிநாட்டுச் சமய நிலையங்களும், மக்களும் இவர்களது தேவைகளை ஈடுசெய்ய ஆவன செய்யப்பெறும்.

## இளைஞர்களே விழிமின் ! எழுமின் !

இத்தகு நல்இளைஞர்களைத் திட்டமிட்டு உருவாக்கும் முயற்சி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசியுடன் மேற்கொள்ளப் பெற்றுவருகிறது. தக்க நல்லறிஞர்கள் இதுபற்றிய சிந்தனைகளை நேரிலோ, எழுத்துமூலமாகவோ தெரிவித்தபின் திட்டவட்டமான அறிவிப்பு வெளிவரும். நமது தொன்மைமிக்க சமயத்தின்பால் இளைஞர்கள் தற்போது காட்டிவரும் ஈடுபாடு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. அறிவியலோடு ஒட்டிய சைவ – சித்தாந்த சாத்திர நெறியும், வாழ்வோடு இயைந்த சமயப்பண்பாடும் மேலைநாடுகளில் துளிர்க்க இளைஞர்களுக்கு இப்போது ஒரு அரியவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. சமயஈடுபாடுகொண்ட தக்க இளைஞர்கள் இதுபற்றி ஆதீனத்தோடு தொடர்புகொள்ளலாம். நல்லறிஞர்கள் இத்திட்டம் வெற்றிபெற ஆக்கபூர்வமான யோசனைகளைத் தெரிவிக்கலாம். நமது நாட்டுமக்கட்கு நல்வழிகாட்டவும், பிறநாடுகளில் வாழும் லட்சோப லட்சம் இந்துக்களுக்கு அருள்வழிகாட்டவும், அமைதியற்ற செல்வ வாழ்வினருக்கு அமைதியூட்டவும், பண்பாடுமிக்க – பதட்டமற்ற உலகைப் படைக்கவும், கிழக்கிலும் மேற்கிலும் வாழும் மக்கள் ஒருங் கிணைந்து நல்வாழ்வுபெற வழிவகுக்கவும், சமயத்துறையில் பயிற்சி பெற்ற இளைஞர்களாலேயே இயலும். எனவே, விரைவில் தொடங்கப் பெற இருக்கும் இவ்வரிய முயற்சிக்கு இறையருளோடு – நல்லன்பர் களின் மனப்பூர்வமான ஆதரவினையும் எதிர்பார்க்கிருேம்.

**மேன்மைகொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்.**

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருச்சிராப்பள்ளி வானொலிநிலையம் நிகழ்த்திவரும் குறள்நெறியில் "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்ற குறள்பற்றி வழங்கிய

# அருளுரை

8—9—1980

உலகில் வாழும் எல்லா உயிர்களுள்ளும் மனிதனே சிறந்தவன். மனித உடலமைப்பில் எல்லா உறுப்புக்களும் இன்றியமையாதன என்றாலும் முகமே பெரிதும் சிறப்புடையது. முகத்தின் துணையின்றி ஒருவரை அடையாளம் காண முடியாது. அதுபோல் எந்த ஒரு நூலாயினும் அதற்கு – முகம்போல் இன்றியமையாத ஒரு முன்னுரை வேண்டும். இதனையே பாயிரம் என்பர்.

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவல் அன்றே"

என்பது பாயிரத்தின் சிறப்பை நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் குறித்துள்ளார். நெஞ்சத்து எண்ணங்களை முகம் பிரதிபலித்துக் காட்டும் என்பதனை, 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பார் திருவள்ளுவர். இதுபோல் நூலின் உள்ளீட்டைப் பிரதிபலித்துக்காட்டும் திறம் பாயிரத்திற்கே உண்டு.

வள்ளுவர் தம் நூலின் முன்னுரையாக நான்கு அதிகாரங்களை அமைத்துள்ளார். இந்நான்கு அதிகாரங்களையும் பாயிரம் என முன்னோர் குறித்தனர்.

"ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போய்ஒருத்தர்
வாய்க்கேட்க நூல்உளதோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்"

என நத்தத்தனார் என்ற சங்கப்புலவரும் இந்நூற்குப் பாயிரம் இது என்பதனைக் குறித்துள்ளார்.

பாயிரம் என்பது கடவுள் வாழ்த்தும், செயப்படுபொருளும் என இருவகையாக அமையும். அதை ஒட்டியேதான் திருவள்ளுவர் தமது நூலின் முதல் அதிகாரமாகக் கடவுள்வாழ்த்து அமைத்திருக்கின்றார். அதுவே, அவரது கடவுள் கொள்கையைத் தெளிவிக்கும். கடவுளைப்பற்றிய குறிப்பை இவ்வதிகாரத்தில் மட்டுமின்றி நூலின் பிறஇடங்களிலும் காணுகின்றோம். துறவறவியலில் 'துறவு' அதிகாரத்தில் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்ற குறளில், 'பற்றற்றான்' எனும் தொடர் கடவுளைத்தவிர வேறு யாரையும் குறித்தற்கில்லை. அரசனை 'இறை' என்றும், 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்றும் வருவன எல்லாம் கடவுளைப்பற்றிய குறிப்புக்களாகும்.

கடவுள் வாழ்த்தைத் திருவள்ளுவர், பிறர்போலப் பெயர் கூறாமல், கடவுளைப்பற்றி மக்கட்குத் தாம் என்ன கூற விரும்பினாரோ அவற்றைக் கூறும் அதிகாரமாகவே அமைத்துள்ளார். முதற்குறளில் தக்கதோர் உவமையால் கடவுள் உண்டு என்பதை நிறுவினார். அடுத்த குறளில் கடவுளது திருவடிகளை வணங்குதல் கல்வியறிவு உடைய மக்களுக்கு இன்றியமையாக் கடன் என்றார். அதனை அடுத்து, கடவுளை வணங்குபவர் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனக் குறித்தருளினார். அடுத்து கடவுளின் திருவடிகளைச் சிந்திப்பவர்கள் எவ்விதத்துன்பங்களாலும் துளங்கார் என்பதை உணர்த்தினார். ஐந்தாவதாக இறைவனை வாழ்த்துவோர்க்கு நல்வினை, தீவினையாகிய இருவினையும் சேரா என வீடுபேறு கிடைத்தலைக் குறிப்பித்தார். அதனை அடுத்துவரும் ஆறாவது திருக்குறளே இன்றைய நம் சிந்தனைக்குரியது.

கடவுள் வாழ்த்தில் ஒவ்வொரு குறளிலும் திருவள்ளுவர் மூன்று செய்திகளைக் குறித்தலைக் காணலாம். ஒன்று கடவுளின் இலக்கணம். இரண்டாவது, கடவுளை நாம் அணுகவேண்டிய அதாவது வழிபடவேண்டியமுறை. மூன்றாவது, கடவுளை வணங்குவதால் உயிர்கள் எய்தும் பயன் என இவை. இவற்றுள் கடவுள் இலக்கணத்தைத் தனியாகக்கூறாமல், கடவுளைக் குறிக்கக் கூறும் பெயரிலேயே அதனை அமைத்து விடுகின்றார் வள்ளுவர். 'ஆதிபகவன்,'' "வாலறிவன்" முதலியவற்றைக் காணலாம். அம்முறையில் இக்குறளிலும் கடவுளைப் 'பொறிவாயில்' என்னும் பெயரால் குறிக்கின்றார். இறைவன் ஐம்பொறிகளை வழியாகக்கொண்டு ஐம்புலன்கள்மேற் செல்கின்ற அவாவை அடக்கினவன் என்பது அதன் பொருள். பொறிகளாவன மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. புலன்களாவன, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. உயிர், மெய் வாய் முதலிய

பொறிகள் வழியாகச் சென்று சுவை, ஒளி முதலிய புலன்களைப் பற்று கின்றன. இதனால் இறைவனுக்கும் ஐம்புல அவா உண்டோ என நாம் நினைத்தல் கூடாது. "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்னும் இடத்தில் இதற்கு உரிய விளக்கத்தை உரைகாரர் பரிமேலழகர் தருகின்றார். எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்று நிற்பவன் என்பதே அதன் பொருள் என்கிறார். எனவே, இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பினும், அவற்றின் தன்மையைத் தான் அடையாதவனாகத் தாமரையிலைத் தண்ணீர் போல் இருக்கின்றான் என்பதே அதன் விளக்கம். இங்கும் அத்தகைய விளக்கத்தையே நாம் கொள்ளுதல் வேண்டும்.

இதனால் ஐப்புலப் பொருள்களை இறைவன் அறிபவனாயினும், அனுபவிப்பவன் அல்லன் என்பது விளங்கும்.

"நேரிழையைக் கலந்து நின்றே புலன்கள் ஐந்தும் வென்றானை"

என அப்பர் பெருமானும்,

"மங்கையோடிருந்தே யோகு செய்வானை"

எனத் திருவிசைப்பா ஆசிரியரும் இதனைக் குறித்தனர்.

அப்படிப்பட்ட இறைவனாலேயே வேத - ஆகமங்களின் வழியாக உலக உயிர்களுக்குப் பொய்யற்ற மெய்யான ஒழுக்க நெறி கூறப் பட்டது. அந்த நெறியில் உயிர்கள் பிழையாது நிற்றல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அவ்வாறு ஒழுக்க நெறியில் பிழையாது நின்றவர்களே, என்றும் ஒரு பெற்றியாய் நிலைத்து நிற்கும் இன்ப வாழ்வாகிய வீடு பேற்றினைப் பெறுவர். எனவே, எல்லாப் பொருள்க ளோடும் கூடியிருந்தும் யாதொன்றையும் அனுபவியாமை இறை இலக்கணம் என்பதை முதலில் உணர்த்துகின்றார். இரண்டாவதாக, அவன் வகுத்த ஒழுக்க நெறியில் தவறாது நிற்றலே இறைவனை அடையும் முறைகளுள் மேலானது என்று குறிப்பிடுகின்றார். மூன்றாவதாக, இம்மேலான முறையே வீடுபேறாகிய மிகச் சிறந்த பயனைத் தருமென்று வலியுறுத்துகின்றார். இனி இக்குறளை நினைவு கூர்வோம்

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

# நுனிக்கொம்பில் இருந்து அடிமரத்தை வெட்டலாமா?*

**செந்தமிழ் இலக்கியச் செம்மல், பேராசிரியர்,**

**டாக்டர், திரு. ந. சஞ்சீவி** எம், ஏ., எம். லிட்., பிஎச், டி.

செந்தமிழும் சிவநெறியும் செழிக்கச் செம்பணிகள் செய்து உலகை உய்விக்கும் - கண்கண்ட தெய்வமாகக் காட்சிதரும் தருமை குருமகா சந்நிதானத்தின் அருளார்ந்த திருவடிகளை - பொன்னார்ந்த திருவடிகள் எனப்புகழ்வதினும் பொருத்தமுடையதாய் எளியேனுக்குப் புலப்படும் அருளார்ந்த திருவடிகளைப் போற்றி முதற்கண் வாழ்த்தி வணங்குகிறேன்.

## சிறப்புரையா? செய்நன்றியுரையா?

முன்பிருந்த - என்றும் நம் முன்பிருக்கும் - விண்ணில் கலந்து கருணைபாலிக்கும் வேதநாயகனாக விளங்குகின்ற நமது தருமை ஆதீனத்தின் இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானத்தின் குருபூசை விழாவிலே உரையாற்றும் பெரும்பேறு என்முன்னோர்கள் செய்த நற்றவப்பயனாக இங்கே எளியேனுக்கும் கிடைத்துள்ளது. என் உரையை இன்றைய குருமகாசந்நிதானம் அவர்களுடைய அளப்பரும் கருணையினால் சிறப்புரை என்று சீராட்டிப் பாராட்டி அச்சிட்டிருந் தாலும், அதை அடியேன் சிறப்புரை என்றுகொள்ள அச்சம் கொள் கிறேன் என்னுரையை எத்தனையோ காரணங்களாலும் நன்றியுரை என்று நவில்வதே பொருத்தமாகும்.

இன்னும் சொன்னால் நன்றி என்பதிலும் சிறப்பு உண்டு; ஆனால் உலகத்தில் மனித உள்ளத்தில் இருக்கும் என்று எனக்குத் தோன்ற வில்லை இவ்வாறு யான் எண்ணுவது சான்றோர்களுக்கும் ஏற்புடைய தாக ஆகுமானால் குருமகாசந்நிதானம் நன்றியுரையைச் சிறப்புரை

---

* 31—10—80 அன்று நடைபெற்ற தருமையாதீனம் 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழாவில் நிகழ்த்திய சிறப்புரையின் கட்டுரை வடிவம்.

என்று குறிப்பதும் சாலப்பொருத்தமே ஆகும். மேலும் சிறப்புரைசெய்வது எளிது; நன்றியுரை நவில்வது கடினம். காரணம் அது உணர்விலிருந்து ஊறி எழுவது. உணர்வு உள்ளத்துக்குப் பேருயினும் உடலுக்கு ஊறு என்றாலும் அடக்கமுடியா உணர்வுகளை-உணர்ச்சிகளை அறிவால் அடக்கிப்பேசத் திருவருள்துணையால் முயல்கிறேன்.

## வழிவழியடிமை

என் நன்றியுரை இருபெரும் அடிப்படைகளில் அமைந்ததாகும். அந்த இரு அடிப்படைகளும் ஆழ்ந்து சிந்திக்கும்பொழுது ஒன்றாகவே ஆதல் ஒல்லும். ஆயினும் விளக்கத்திற்காக இரண்டாக எண்ணுதல் எளிது – இனிது. தருமை ஆதீனத்திற்கு மூன்று தலைமுறைகளாக அடிமைப்பட்டிருக்கும் பல அடியார்களுள் அடியேனும் ஒருவன். என் பாட்டனார் நூற்றாண்டுகளுக்கு முன்பு தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து – மண்டகப்பட்டிலிருந்து – குடிபெயர்ந்து கூழுக்காக வாழ்தல் வேண்டி திருச்சிராப்பள்ளிக்கு – மலைக்கோட்டைக்குச் சென்றவர். அவர்செய்த புண்ணியப் பயனால் அங்கே சிறப்புற இருக்கும் தருமை ஆதீனத்தைச் சார்ந்த மௌனகுருமடத்தில் கணக்கெழுதும் கடமையைப்பெறும் பெரும்பேறு பெற்றார். அதன் காரணமாக அவர் வயிற்றுவாழ்வு சிறந்ததோடு நெஞ்சவாழ்வும் நிறைந்தது. வைணவக் குடும்பத்தில் பிறந்த அவர் சிவநெறி மேற்கொண்டு சிராப்பள்ளி மேயவனுக்கு மணிவிளக்கும் மணிமண்டபமும் அமைக்கும் திருப்பணிகளெல்லாம் செய்வதில் முன்னின்றார். அவரின் ஒரே மகனாகிய என் தந்தையாரோ மௌனமடத்தில் அன்னாள் மாட்சிபெற்று விளங்கியவரும் பின்னாளில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் பெரிய பட்டத்தில் இருந்தவரென்று இன்னாள் அடியேன் கேள்விப்படுகின்றவருமாகிய ஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகளின் திருவடிகளில் அமர்ந்து நால்வர் நான்மணி மாலையும் – நன்னூலும் பாடம் கேட்டார். அதன் பயனாகவே பின்னாளில் தவத்திரு ஞானியார் அடிகள் தொடர்பும் டாக்டர் உ.வே சுவாமிநாதஐயர் உள்ளன்பும் பெற்று என் தந்தையார் நடேசமுதலியார் தம்காலத்தில் செல்வாக்குடைய சிறந்த தமிழாசிரியராய்விளங்கினர். எந்தமௌனமடத்தில் அவர் தமிழ்க்கல்விபெற்றாரோ அந்த மௌனமடத்தில் பின்னாளில் பத்துப்பாட்டு முதல் பக்திப் பாடல்கள்வரை பலவற்றிற்கும் நூற்றுக் கணக்கானவர் பாடங் கேட்டு (நூற்றுக்கால்மண்டபத்திலும்) பயன்பெறும் வகையில் "தாயுமானவர் இலவசத்தமிழ்வகுப்புக்களை" நடத்தினர். என் தந்தையாருக்கு மூதல் தமிழ்க் குருவாக விளங்கிய அந்தச் சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகளின் திருவுருவப் படத்தை – தரையிலெல்லாம் தண்ணீர் போல் ஒழுகிக்கிடந்த செஞ்சடைத் தோற்றத்தை – குழந்தைப் பருவம் முதற்கொண்டே அடியேன் கூர்ந்து கூர்ந்து பார்த்துப்பார்த்து நெஞ்சம் குழைவது உண்டு.

## இளைஞர்க்காகவே சொல்கிறேன்

என் பாட்டனார் எளியேன் பிறப்பதற்கு முன்பும் பிறந்தபின் சிறப்பதற்கு முன்பும் மௌனமடத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களுக்கு சின்னஞ்சிறுவனாக இருந்த என்னையும் சேர அழைத்துக் கொண்டுபோய் ஒவ்வொருநாள்மாலையும் என்பாட்டி நூலில்தொடுத்த தும்பைப் பூமாலையைச் சூட்டி, தாமரைத் திரியிட்ட நெய்விளக்கை ஏற்றுவதை நித்தம் நித்தம் பார்த்திருக்கிறேன். கோடான கோடி மக்கள் வாழும் தமிழ்நாட்டில் எளியேன் இன்று ஒருமூத்த இந்தியப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைக்குத் தலைவனாக நேர்ந்தது என்றால் - எத்தனையோ வேதனைகளையும் சோதனைகளையும், சாதனைகளாக்கி வாழமுடிகிறதென்றால் இப்போது நீங்களே சொல்லுங்கள்; இது தருமையாதீனத்தின் தவவலிமை தந்த பிச்சை அல்லவா? இந்தப் பின்னணியின் பயனாகத்தான் பதினைந்து வயதிலேயே என் தந்தையை இழந்த பருவத்தில் 1943 கோடை விடுமுறையில் அப்போது மௌனமடத்தில் கட்டளை விசாரணையாக இருந்த சித்தாந்தக் கடல் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளால் இந்தப் புனித இடத்திற்கு முதல்முதல் அழைத்து வரப்பட்டேன். அவ்வமயம் சித்தாந்தச்சரபம் ஈசானசிவாசாரியார் அவர்கள் நடத்திய சித்தாந்த வகுப்பிலும் கடை மாணவனாகவேனும் அமர்ந்தேன். மௌனம் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளால் அறிமுகப்படுத்தப்பட்டு, அப்போதிருந்த 24ஆவது குருமகாசந்நிதானத்தின் கருணையால் 60 உருபாய்களைப் புத்தகங்கள்வாங்க அடியேன் பெற்றேன். இன்று பலநூறு கொடுக்கும் பண்பும் பயனும் உடையதாக எளியேன்வாழ்க்கை ஓரளவேனும் இருக்கமுடிகிறதென்றால் நீங்களே நினையுங்கள் தருமை ஆதீனத்தின் தவவலிமை அல்லவா? புல்லையும் வில்லாக்கும் பேராற்றல் அல்லவா காரணம்? இதையும் இங்கே நான் குறிப்பிடுவதற்குக்காரணம் நன்றியுணர்வுக்காகமட்டும் அல்ல – இதோ நம்மத்தியில் இருக்கும் இளஞ்சிறுவர்களும் இத்தருமை ஆதீனத்தின் கல்விக்கூடங்களிலே பயிலுகின்ற மாணவமணிகளும் தங்களுக்குக் கிடைத்துள்ள இந்தக் கல்லாலமர அருளை எவ்வளவு உண்மையாகவும் உயர்வாகவும் உறுதியாகவும் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதை வலியுறுத்தவுமேயாகும்

## யான் பெற்றபேறு

25 ஆவது குருமாகசந்நிதானத்தின் 9 ஆவது தருபூசை நாளில் உரையாற்றும் வகையில் எளியேனுக்குக் கிடைத்துள்ள இப்பேற்றினைப் பெரிதும் போற்றி மகிழ்கின்றேன் என்னுடைய பல்கலைக் கழகத்தில் நாளை - என்னுடைய மதிப்பிற்குரிய தத்துவப்பேராசிரியர்

டி. எம். பி. மகாதேவன் அவர்கள் நிகழ்த்த இருப்பது போன்ற பட்ட மளிப்புவிழாச் சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தும் வாய்ப்பினை ஒருநாள் பெற்றாலும், இந்த அளவிற்கு மன நிறைவு அடைவேன் என்று தோன்ற வில்லை. காரணம் தருமை ஆதீனத்திற்கு யான் குடும்ப அடிமை என்பது மட்டுமன்று; கொள்கை அடிப்படையிலேயே அடியேன் செந்தமிழையும் சித்தாந்த நெறியையும் தமிழினத்தின் இருகண்களெனக் கருதுவதாலேயே ஆகும். மேலும் பொதுக்கல்வி கற்பிக்கும் எந்தப்பல்கலைக் கழகத்தினும் சமயக்கல்வி புகட்டும் பல்கலைக்கழகமே சாலச்சிறந்தது மன வாழ்வுக்கு என்பது எளியேனும் உணரும் ஏற்றம்.

" கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் "

" கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும் "

## தன் குற்றம் பார்க்குமவர் உளரோ ?

இந்தக் குருபூசைத் திருநாளில் நம் தமிழ்த் திருமடங்களின் தனிச் சிறப்பை அடியேன் குறிப்பிடாமல் இருத்தல் இயலாது. சூழல் அப்படி. அதுவும் தமிழின் பெயராலும் தமிழ்வழிப்பட்ட தனிக் கொள்கைகளின் பெயராலும் அரசு அமைந்து ஆட்சி நடைபெறும் காலத்தில் பொறுப்புடையவர்கள் பலவகையிலும் - பல தரங்களிலும் பல நிலைகளிலும் இருக்கும் பொதுமக்கள் கூட்டங்களில் திருமடங்களைப்பற்றிக் குறைவுதோன்றப் பேசுவது நிறைவுடைமை ஆகாது என்று எளியேன் தெரிவிக்கவிரும்புகிறேன். எனவே ஆங்கிலத்தில் சொல்லுவதுபோல் தண்ணீரைத் தூய்மைப்படுத்துவதற்காகத் தண்ணீர்த்தொட்டியில் இருக்கும் குழந்தையையும் தூக்கி எறிந்து விடக்கூடாது. இன்னும் எளிமையாகச் சொன்னால், கட்டியை அல்லது கழுத்தைச் சுற்றிப்போட்ட கயிற்றை அறுப்பதாக நினைத்துக் கொண்டு - கழுத்தையே அறுத்துவிடக்கூடாது

சமயச்சார்பாலும் ஆதீனச்சார்பாலும் இவ்வாறு அடியேன் பேசுவதாக எந்தப் பகுத்தறிவு அல்லது கடவுள்மறுப்புவாதியேனும் அலுவல் பலவற்றிற்கிடையே ஆழ்ந்த ஆராய்ச்சி செய்யமுடியாத சிக்கலில் – அறியாமைச் சிக்கலில் – சிக்கி இருப்பவர்களானாலும் ஐந்தாண்டு அல்லது பத்தாண்டுகளில் மாறிவிடும் பதவிதரும் பலத்தால் அவசரப் பட்டோ ஆத்திரப்பட்டோ பேசுபவர்கள் ஆனாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளில், அரசியல், மொழி, பண்பாடு முதலியனபற்றி உண்மைகாணும் ஒரே நோக்கத்தோடு உழைத்து உழைத்து அமெரிக்கர்களைப்போன்ற அயல்நாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள ஏடுகளைப் பார்த்தேனும் காலம் கடக்குமுன் தங்கள் தவறான எண்ணங்களைத்-

திருத்திக்கொள்வது தக்கது. இதையும்கூட மிகுந்த பணிவோ அடியேன் தெரிவித்துக்கொள்ளக் காரணம், அவசரப்பட்டோ ஆத்திரப்பட்டோ, பொறுப்பிலிருப்பவர்கள் பொதுமக்களிடம் தவறான கருத்துக்களைத் தக்கசமன்பாடு இன்றி (without proportions) பேசிவிடுவது நுனிக்கொம்பிலிருந்து அடிமரத்தையே வெட்டுகின்ற அவலமாகிவிடும் என்பதனால்தான். எனவே பொறுப்புடையவர்களின் நல்வாழ்வு கருதியே பொறுமைகாட்டவேண்டும் – விகித விழுப்பம் பார்க்கவேண்டும் என்ற இந்தமிகப்பணிவான கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழர்களின் இருகண்களாகவும், இருநுரையீரல்களாகவும் இருக்கும் செந்தமிழையும், சித்தாந்த நெறியையும் கடந்த பன்னூறு ஆண்டுகளாகப் பாதுகாத்துக்கொடுத்த சைவத் திருமடங்களின் சாதனையைச் சற்று மறந்தாலும் நன்றிகொன்றபாவம் - வள்ளுவர்வழிப்படியும் நம்மைச் சுடும் என்று அடியேன் நடுங்குவதால்தான் இதை இயம்பலானேன். இன்னும் இதுபற்றி நான்சொல்வதற்கு ஏதுமில்லை. தமிழகம் போற்றும் தலைமறையிலிருந்தும் உலகமெல்லாம் அறிந்திருக்கும் பைபிள் மதமறையிலிருந்தும் இரு மேற்கோள்களை வேண்டுமானால் நினைவுபடுத்துவது என்னை எவரும் தவறாக எண்ணாமல் இருக்க உதவும்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

"உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை மறந்துவிட்டு
எதிராளி கண்ணிலிருக்கும் துரும்பைத் துருவாதே"

## என்குற்றம் இயம்புகிறேன்

அடுத்து இந்தக் குருபூசைத் திருநாளின் வெளியீடாகக் குருமகா சந்நிதானத்தால் வெளியிடப்பட்டுள்ள "இடர்களையும் திருமுறைத் திரட்டு" என்னும் அரியநூலை வெளியிடுவதற்கு முன்பு முன்பிருந்த குருமகா சந்நிதானத்தைப்பற்றி - என்பால் பெருங்கருணை கொண்டிருந்த பெருமானைப்பற்றி - இங்கு இருக்கும் இளைஞர்களுக்கும் பயன்படும் வகையில் என் தவறு ஒன்றையும் எடுத்துச்சொல்வது ஏற்புடைத்தென்று எண்ணுகின்றேன். குருபூசைக்குரிய குருமகா சந்நிதானம் கயிலைக் குருமணி என்று போற்றப்படும் பெருமைக்குரிய சந்நிதானம் ஆகும். அடியேன் தொடக்கத்தில் சொல்லியதுபோலப் பிறப்பதற்கு முன்பிருந்தே தொடர்புடைய தருமை ஆதீனத்தினிடம் யான் போதுமான தொடர்பை- ஆண்டுக்குஒருமுறையேனும் தரிசனம் செய்யும் தொடர்பை வைத்திருந்திருப்பேனேயானால் இன்றுபோல்

நோயும் முதுமையும் என்னைநோக்கி விரைந்துவராத காலத்திலேயே அடியேன் குருமகாசந்நிதானத்தின் கயிலையாத்திரையில், மிகஎளிமையாகக் கலந்துகொண்டு இருந்திருப்பேன். கிடைத்தற்கரிய அந்தப் பேற்றினை என்னுடைய புறக்கணிப்புக் கீழ்மையாலேயே இழந்தேன். இதையுங்கூட முன்னைய குருமகாசந்நிதானத்தின் சந்நிதியில், குறிப்பிடுவதற்குக் காரணங்கள் உண்டு. ஒன்று என் புறக்கணிப்புக் கீழ்மையால் யான் அடைந்த இழப்பைப்போன்ற ஓர் இழப்பை இத் திருமடத்தில் தொடர்புடைய வேறு எவரும் அடையக்கூடாது என்ற ஆற்றுமையாலேயே ஆகும். இரண்டாவது காரணம் எஞ்சிய வாழ்நாளில் செஞ்சீனுவுக்கும் பிறநாடுகளுக்கும் செல்லும் வாய்ப்பு எனக்கு வருதல்கூடும். என் மனக்குறையை இச்சந்நிதியில் சொல்லுவதன் வாயிலாக அருள்வாக்குச் சொல்லும்வகையில் விண்ணில் மறைந்து அருள்புரியும் வேதநாயகனாக விளங்கும் குருமூர்த்திகள் என்றேனும் ஒருநாள் எனக்குக் கயிலைக் காட்சியைக் காட்டித் தருவார்கள் என்ற நம்பிக்கையில்தான்.

## சைவசித்தாந்தப் பல்கலைக்கழகம் வேண்டும்

இனி இடர்களையும் திருமுறைத்திரட்டைப்பற்றி இந்தக் குருமகா சந்நிதியில் திடீரென எனக்குத் தோன்றிய எண்ணங்களைமட்டும் என் கருத்துக் காணிக்கையாக உங்களிடம் செலுத்தி விடைபெற்றுக் கொள்வேன். இப்பணியையும் அடியேன் செய்வதற்குமுன் இவ்வெளியீட்டை அருளியுள்ள இப்போதைய குருமகாசந்நிதானத்துக்குக் கோடானுகோடி சைவத் தமிழ் மக்கள் சார்பில் நன்றி பாராட்ட வேண்டுவது என்கடமை. முறையாகத் தமிழும், சைவமும் பயின்றும் திருமட நிருவாகத்தில் அடியவராயிருந்து படிப்படியாக ஆண்டவன் அருளால் இன்று முடிநிலை பெற்றுள்ள குருமகாசந்நிதானம் தம் ஆட்சிக்காலத்தில் தருமையில் உலகம் போற்றும் ஒரு சைவசித்தாந்த பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிப்பார்கள் என்பது எனது பெரு நம்பிக்கை. அதற்கும் அண்மையில் குருமகாசந்நிதானம் தொடங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்திற்கும் இந்த "இடர்களையும் திருமுறைத் திரட்டு" ஓர் உழவாரப்படையாகும் – ஆகவேண்டும் என்பது என் வேண்டுதல். இடர் என்ற சொல்லின் வேர் 'இடு' என்பதாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அடு – அடர் படு – படர், தொடு – தொடர் போல இடு – இடர், அமைந்திருக்கும். என எண்ணுகிறேன். நல்வினை தீவினை இரண்டும் விலங்குகள்தாம். ஆனால் முன்னது செம்பொன் – பின்னது கரும்பொன் என்று அருளாளர் கூறுவதை அறிவுடையோர் அனைவரும் அறிவர். அந்தக் கருத்தையும் அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது – நல்வினையால் வரும் பொன்விலங்கும் ஓர் இடர்தான் என்பதைப் புரிந்து

கொள்ளும்போது – இடுதல் என்ற ஒன்றையே தொடுதல் இல்லாத நிலையில் எவ்வித இடரிலும் படுதல் இல்லை என்பது தெளிவாகும் என்று எளியேனுக்குத் தோன்றுகிறது. வினையே இல்லாதபோது வினை ஏது? அண்மைக்காலத்தில் நோபல்பரிசுபெற்றுள்ள அமெரிக்கப் பொருளியல் அறிஞர்களும் In Put - Out Put - ஆய்வுகாரணமாகவே அப்பரிசைப் பெற்றுள்ளார். In Put - டே இல்லாத போது Out Put - ஏது? சித்தம்போக்கு சிவம்போக்கு இல்லை! சிவம் போக்கு சித்தம்போக்கு!

## ஒன்றுபட்டு உயர்வோம்

திருமுறை என்ற தொடரையும் ஈண்டு ஆழ்ந்து நினைத்தல் தகும்! இந்தச் சந்நிதியில் எனக்குத் தோன்றிய கருத்து; முறை என்பதற்கு நீதி; என்றும் இருக்கும் பொருள். எனவே திருமுறைகள் என்பது நூல் தொகுப்புமட்டுமன்று - தெய்வநீதி - ( Divine Justice ) தெரிவிக்கும் திருமுறை என்பதும் ஆகும். போலி பகுத்தறிவும் சொத்தைச் சுயமரியாதையும் பிறர்மானம் கெடுக்கும் தன்மானமும் பேசுவோர் அருள் அறிவால் அறிய அரிது என்பதை மிக அண்மையில் வெளி வந்திருக்கும் அமெரிக்க நாட்டு மருத்துவமேதை ஒருவரின் மூளை பற்றிய ஆய்வின் முடிவைப் படித்துப்பார்த்தாலும் எளிதாகத்தெரிந்து கொள்ளலாம். அறிவு அருளை அடைய ஒருநாளும் உதவாது என்பது இன்று மூடநம்பிக்கை இல்லை அறிவியல் ஆராய்ச்சியின் முடிந்த முடிவு. மேலும் ( Spritualism is a Scientific necessity for growth and development ) இறுதியாக-உறுதியாக அடியேன் தெரிவிக்கத்தக்க கருத்து எல்லாத்துன்பங்களுக்கும் காரணம் தனித்தனியாகப் பிரிந்து பார்ப்பதுதான். இந்தத்தனிமை ஒழிந்து திரளாகத் திரளும்போது தெய்வம் தெரியும். இதை நினைவூட்டுவதே திரட்டு என்னும்சொல்.

**"ஒன்றாகக் காண்பதே காட்சி!"**

---

## *சிவதரிசன பலன்*

காலைதொழ அற்றைவினை கட்டகலும்; கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்; — மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும்.

---

# மரத்தை வெட்டாதீர்

## ஒரு மரத்தின் விலை மதிப்பு—ரூ. 15. 7 லட்சம்

1981 ஆம் வருடம் சனவரி மாதம் 4-ம் தேதி வாரணாசியில் நடைபெற்ற விஞ்ஞான மாநாட்டில் (Science Congress) கல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு T. M. தாஸ் அவர்கள் "தாவரங்களும் அசுத்தங்களும்" (Plants and Pollution) என்ற தலைப்பில், தனது தலைமை உரையில் பேசிய ஆராய்ச்சிக் கட்டுரையின் சாரம் :-

| | | |
|---|---|---|
| ஒரு மரம் தனது 50 ஆண்டுக்கால வளர்ச்சியில் சமுதாயத்திற்குச் செய்த தொண்டின் மதிப்பு | ரூ. | 15. 7 லட்சம் |

விபரம்

| | | |
|---|---|---|
| பிராணவாயு உற்பத்தியின் விலை மதிப்பு ... | ரூ. | 2. 5 லட்சம் |
| வாயுமண்டல அசுத்தம் தவிர்க்கப் படுதலின் விலை மதிப்பு ... | ரூ. | 5. 0 லட்சம் |
| மண் அரிப்புத் தடுப்பு மண்வள அதிகரிப்பு இவைகளின் விலை மதிப்பு ... | ரூ. | 2. 5 லட்சம் |
| தண்ணீர் வீணாக்கப்படாமல் மறுமாற்றம் செய்தலும், வாயுமண்டலத்திலுள்ள தண்ணீரின் அளவு கட்டுப்படுத்தப்படுதலும் ஆகிய இவைகளின் விலை மதிப்பு ... | ரூ. | 3. 0 லட்சம் |
| பறவைகள் விலங்கினங்கள் இவைகளின் பாதுகாப்புக்கான உறைவிடமாக அமைதலின் விலை மதிப்பு ... | ரூ. | 2. 5 லட்சம் |
| புரதச்சத்து தயாரித்து உதவுதலின் (Protein Conversion) விலை மதிப்பு ... | ரூ. | 0. 2 லட்சம் |
| ஆக | ரூ. | 15. 7 லட்சம். |

ஒரு மரத்தின் பூ, பழம், மரத்தில் செய்யப்படும் பொருள்களாக உபயோகமாதல், எரிபொருளாக அமைதல் இவைகளின் விலை மதிப்பு மேற்கூறியவற்றில் அடங்கவில்லை.

நன்றி. — இந்து 5—1—1981.

# மனித உடலில் தங்கம்

ஒளியைப் பிரித்து ஆராய்ந்து மூலகங்களைக் கண்டுபிடிக்கும் "ஸ்பெக்ட்ராஸ் கோப்" ஆய்வுமுறையைத் தாம் பயன்படுத்திப் பல்லாயிரம் "சாம்பிள்" களை, ஆராய்ந்ததாகவும், எல்லா சாம்பிள் களிலும் தங்க மூலகம் காணப்பட்டது என்றும் டாக்டர் ஸ்கந்தன் கூறினர்.

ஆண் மலட்டுத்தன்மையைக் குணப்படுத்த ஆயுர்வேத மருத்துவத்தில் தங்கம் சேர்ந்த மருந்துகள் சிபாரிசு செய்யப்படுவதை அவர் சுட்டிக்காட்டினர். வீரியத்தில் உள்ள தங்கத்தின் அளவுக்கு ஏற்ப ஜீவஅணுக்களின் உயிரோட்டமும் இருக்கிறது என்று தோன்றுவதாக அவர் குறிப்பிட்டார். இத்தங்கத்தின் அளவைக் குறைக்கக்கூடிய மருந்துகளை உருவாக்குவதன்மூலம் முற்றும் புதிய முறையில் கருத்தடை மருந்துகளைத் தயாரிக்க வழி ஏற்படுகிறது.

ஆண்களின் அடிவயிற்றில் உள்ள ப்ராஸ்டேட் சுரப்பியிலும், ஜீவஅணுக்கள் உற்பத்தியாகும் இடமாகிய சுருண்ட நாளத்திலும் ("எபிடிடைமிஸ்") தங்கம் உண்டாகிறதென தமது ஆராய்ச்சிகள் காட்டுவதாக, பம்பாய் பி. ஜெ. வைத்தியக் கல்லூரியில் உடல் இயக்கவியல் துணைப்பேராசிரியராக இருக்கும் டாக்டர். ஸ்கந்தன் சொன்னர்.

நன்றி. — தினமணி, 13—1—81

---

# ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திரத் திருநாளாகிய ஆயில்ய வழிபாடு மாதந்தோறும் நடைபெறுவதுபோல இம்மாத வழிபாடு மாசித்திங்கள் 7 ஆம் நாள் (18—2—81) புதன்கிழமையன்று காவிரியின் தென்கரைத் தலங்களாகிய திருஇராமனதீச்சரம், திருப்பயற்றூர், திருச்செங்காட்டங்குடி என்ற இம்மூன்று திருத்தலங்களிலும் ஆதீனச்சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சமயச்சொற்பொழிவுகளும் நடைபெறும். அவ்வத்தலத் திருப்பதிகங்களும் அச்சிட்டு வழங்கப்பெறும்.

# திருப்புகலூர், திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,**

திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனடி கூடிய பெருஞ்சிறப்பைப் பெற்ற தலம் திருப்புகலூர். இத்தலம் தஞ்சைமாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ளது மாயூரம்-திருவாரூர் புகைவண்டித் தொடரில் நன்னிலம் இரயில் நிலையத்தில் இறங்கிக் கிழக்கே 7 கி. மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம், பேருந்து வசதிகள் உள்ளன. வர்த்தமானிச்சரம் திருப்புகலூர்க் கோயிலிலேயே இணைந்துள்ளது.

இவ்விரு தலங்களும், வேளாகுறிச்சி ஆதீனத்தின் பரிபாலனத்தில் விளங்குகின்றன. சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 75, 76 வது தலங்களாக இவை எண்ணப்பெறும்.

**தலத்தின் பெயர்கள் :**

இறைவன் திருவடிகளைப் புகலாக அடைந்த ஊர் என்ற பொருளில் இவ்வூர்ப்பெயர் உள்ளது. அப்பர் முத்திப்பேறெய்தியதற்கு முன்னமே இப்பெயர் வழங்குதலால் தேவர்களும் மற்றும் முனிவர்களும் புகலாக அடைந்த ஊர் என்றோ, வேறு தனியான புராண வரலாற்றைக் கொண்டோ இப்பெயர் இவ்வூருக்கு வழங்கியது ஆகலாம் திருப்புகலாக அடைந்துள்ள தலம் என்றும் கொள்ளலாம். வடமொழியில் புன்னாகவனம், சரண்யபுரம், இரக்தாரண்யம் என இத்தலம் குறிக்கப்படுகிறது.

**தலப்பெருமை :**

திருநாவுக்கரசர் முத்திப்பேறு எய்திய தலம். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் முருகநாயனார் அவதரித்து இறைவனுக்குப் பூத் தொண்டுபுரிந்த சிறப்பினையுடையது. ஞானசம்பந்தரும் அப்பரும்

சிறுத்தொண்டர் நீலநக்கர் முதலானுரோடு இத்தலத்தில் முருக நாயனுர் திருமடத்தில் உடனுறைந்து மகிழ்ந்த செய்தியைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் விவரித்துள்ளார். சுந்தரர்க்கு இறைவன் செங்கற்களைப் பொன்னுக்கி அளித்த அற்புத வரலாறு இத்தலத்தில் நிகழ்ந்ததேயாகும். அக்கினிதேவன் பூசித்த பெருமையும், பாரத் துவாசர் முதலிய முனிவர்கள் வழிபட்ட சிறப்புமுடையது

**கோயிலமைப்பு :**

நாற்புறமும் அழகிய அகழியால் சூழப்பெற்று நடுவில் புதிய பொலிவோடு கோயில் விளங்குகிறது. கிழக்குநோக்கிய சந்நிதி. ஐந்து நிலைக் கோபுரமும் அதையடுத்த மூன்றுநிலைக் கோபுரமும் கோயிலை அணிசெய்கின்றன. இரண்டு திருச்சுற்றுக்கள் உள்ளன.

இராஜகோபுரத்தை அடுத்து, கொடிமரமும் நந்தி பலிபீடங்களும் உள்ளன. வலதுபுறத்தில் அம்பாள் கோயில் தெற்குநோக்கி உள்ளது. எதிரே வசந்த மண்டபம் உள்ளது வெளித் திருச்சுற்றில் தெற்கே சிந்தாமணீசுரரும். தென்மேற்கே விஷ்ணுபூசித்த லிங்கமும் நர்த்தன கணபதியும், கிழக்கே யாகசாலையும் பாரத்வாசர் பூசித்த லிங்கமும் அப்பர் ஐக்கிய சிற்பமும் உள்ளன,

உள்திருச்சுற்றில் கிழக்கே அக்னிதேவரும் தெற்கே உள்ள திருமாளிகைப்பத்தியில் அறுபத்து மூவரும், மேற்கே விநாயகரும் அப்பர் மூலவரும் உள்ளனர் அடுத்து, ததீசி, பராசரர், பிருகு, புலத்தியர், நிலகண்ட சிவாசாரியார், ஜாபாலி, வாதராயர், முருகன் பூசித்த லிங்கங்கள் உள்ளன. நடுவே முருகன் எழுந்தருளியுள்ளார் வடக்கே சனீசுவரன் அன்னபூரணி சரசுவதி நவக்கிரகங்கள் உள்ளனர். அடுத்துக் காலசம்கார மூர்த்தியும் இறைவனை வழிபடும் திரிமுகனும் உள்ளனர். தனியே தலமரம் புன்னை உள்ளது.

உள்திருச்சுற்றில் தனிக்கோயில்களாகத் தெற்கே அகோரலிங்கம்' பூதேசுரர், வடக்கே பவிஷ்யேசுரர், வாமதேவர் பூசித்த லிங்கம், சண்டேசுரர் கோயில்கள் உள்ளன. ஈசானதிசையில் நடராசர் சபை யும், அடுத்து பைரவர்சந்நிதியும் உள்ளன. கர்ப்பக்கிருகக்கோஷ்டங் களில் தெற்கே அகத்தியர், நடராசர், தட்சிணுமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே பிர்மா துர்க்கை திருவுருவங்கள் உள்ளன. வலமாகவந்து முன்மண்டபத்தை அடைவோம். இங்குத் தலத்திருப் பதிகங்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. கோயிலின் இடதுபுறத்தில் சந்திரசேகரரும், வலதுபுறத்தில் வர்த்தமானேசுரரும் விளங்கும் விமானங்கள் இணைந்துள்ளன.

துவாரபாலகருக்குமுன் விளங்கும் பிரதான விநாயகரை வணங்கி உள்ளே மகாமண்டபத்தை அடைவோம் மகாமண்டபத்தில் நம் கருத்தைப் பிணிக்கும் தெய்வத்திருவுலா மூர்த்திகள் விளங்குகின்றனர். பஞ்சமூர்த்திகள், அப்பர், அக்னிதேவர், திரிபுரசம்காரமூர்த்தி முதலியோர் திருவுருவங்கள் தரிசிக்கத்தக்கவை.

ஸ்நபனமண்டபத்தில் விளங்கும் துவாரகணபதியை வழிபட்டு அருள்மிகு அக்கினீசுரரைத் தரிசிப்போம். இடப்பால் தியாகேசர் சபைபோலத் திகழும் மண்டபத்தில் அக்கினிதேவனுக்கு அருள் வழங்கிய சந்திரசேகரரை வணங்கலாம். வலப்பால் அருள்மிகு வர்த்தமானேசுரரையும் மனோன்மணியம்மையையும் முருகநாயனாரையும் வழிபடலாம்

வெளித்திருச்சுற்றில் அருள்மிகு கருந்தார்குழலி அம்மையைத் தரிசித்துப், புகலூர் வழிபாட்டை நிறைவுசெய்யலாம்.

**மூர்த்திகள் :**

இறைவன் திருப்பெயர் அருள்மிகு அக்னிசுவரர் என்பது. சரண்யபுரீசர், கோணப்பிரான் முதலிய பெயர்களும் வழங்கப்பெறும். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு கருந்தார்குழலி. வர்த்தமானேச்சரத்தில் உறையும் இறைவன் திருப்பெயர் அருள்மிகு வர்த்தமானேசுவரர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு மனோன்மணி அக்னீசுவரர் கோயிலில் அப்பர் தனிச்சிறப்போடு போற்றப்படுகிறார் வர்த்தமானேசுவரர் கோயிலில் முருக நாயனார் விளங்குகிறார். சந்திரசேகரர் இத்தலத்தில் மிக்க சிறப்புடையவர்.

**தீர்த்தம் :**

அக்கினி தீர்த்தம் (கோயிலைச் சுற்றியுள்ள அகழி). தலமரம் – புன்னை.

**வரலாற்றுப் பெருமைகள் :**

**முருக நாயனார் :—** இவர் திருப்புகலூரில் அந்தணர் மரபில் தோன்றியவர் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து மலர் கொய்து மாலைகள் தொடுத்து, திருப்புகலூர் இறைவனுக்கு அணிவிக்கும் திருத்தொண்டினைச் செய்தவர். திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசர் சிறுத்தொண்டர் திருநீலநக்கர் ஆகியோரையும் தம்திருமடத்திற்கு எழுந்தருளச் செய்து போற்றியவர். ஞானசம்பந்தர் முருக நாயனாரின் தொண்டினை 'வர்த்தமானீச்சரத்துத் தேவாரத்தில் போற்றிப் பாடியுள்ளார். ஞானசம்பந்தர் திருமண விழாவில் சிவசோதியில் கலந்த பெருமையைப் பெற்றவர் இந்நாயனார்.

**திருநாவுக்கரசு சுவாமிகள் :**

திருஞானசம்பந்தர் முருக நாயனுர் திருமடத்தில் தங்கியிருந்த போது அப்பர் திருவாரூர் திருவாதிரை விழாக்கண்டு திருப்புகலூர் வந்தார். திருஞானசம்பந்தர் அவரை எதிர்கொண்டழைத்துவந்து ஆரூரில் நடந்த திருவாதிரை விழாச் சிறப்பினைக் கூறுமாறு கேட்க, திருநாவுக்கரசர் 'முத்துவிதானம்' என்ற திருப்பதிகத்தால் அவ்விழாச் சிறப்பை ஞானசம்பந்தருக்கு வகுத்துரைத்தார். முருக நாயனுர் திருமடத்தில் ஞானசம்பந்தரோடும் சிறுத்தொண்டர் திருநீலநக்கர் முதலிய அடியவர்களோடும் தங்கி அளவளாவி மகிழ்ந்தார்.

அப்பர் பல தலங்களையும் தரிசித்துவிட்டு இறைவனடி கூடும் பெருவேட்கையோடு இத்தலத்திற்கு எழுந்தருளிப் பலநாள் தங்கி நின்றதிருத்தாண்டகம், நீடுதிருத்தாண்டகம், திருநேரிசை. ஆருயிர் விருத்தம், தசபுராணம். பாவநாசப்பதிகம் முதலியவற்றைப் பாடி மகிழ்ந்துரைத்தார். அப்பரின் மன உறுதியை உலகிற்கு உணர்த்த விரும்பிய இறைவன் அவர் உழவாரப்பணி செய்யும் இடங்களில் பொன்னும் மணியும் நிறைந்து விளங்கச்செய்தருளினுர். அப்பர் அவற்றைக் கல் மண்போலவே கருதிப் பொய்கையில் வாரி எறிந்தார் தெய்வமகளிர் அவர்முன் ஆடிப் பாடி மையல் விளைக்க வந்தனர். அப்பர் மனம் திரியாது உறுதியோடிருந்து 'பொய்மாயப் பெருங் கடலில்' என்ற தாண்டகப் பாடலால் தம் வெறுப்பைப் புலப் படுத்தினுர். மூவாசையும் துறந்த முழுத்துறவியாய் விளங்கிய அப்பர் ஒரு சித்திரைச் சதயநன்னளில் 'எண்ணுகேன் என்சொல்லி' என்ற திருத்தாண்டகத்தால் இறைவனடி கூடவிரும்பும் தம் விருப்பினை வெளிப்படுத்தியருளி, சிவசோதியில்கலந்து சிவானந்த ஞானவடி வேயாகி, இறைவன் திருவடிக்கீழ் இரண்டறக்கலந்தருளினுர்.

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர சமர்ந்திருந்தார்.

என்பது பெரியபுராணப்பாடல்.

சித்திரைச் சதயவிழா பத்து நாட்களிலும் அப்பர் வரலாற்று நிகழ்ச்சிகள் ஐதீக விழாவாக இத்தலத்தில் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாள் நிகழும் அப்பர் ஐக்கியம் இத்தலத்தில் மிக்கசிறப்பு உடையது.

**இலக்கியச் சிறப்பு :**

சம்பந்தர் அப்பர் சுந்தரர் மூவரும் அருளிய ஒன்பது திருப் பதிகங்கள் இத்தலத்திற்குள்ளன. பதினொராம் திருமுறையில் பரண தேவரும் பட்டினத்துப் பிள்ளையாரும் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

நம்பியாண்டார் நம்பிகளும் இத்தலத்தைக் குறிப்பிட்டருளுகிருர் பெரியபுராணத்தில் சேக்கிழார் இத்தலச்சிறப்பை விரிவாகக் கூறி யுள்ளார். நெற்குன்றவாணர் இயற்றிய அந்தாதி ஒன்றும் இத்தலத் திற்குள்ளது

**புராண வரலாறுகள் :**

அக்கினிபகவான் தான் எதையும் புசிக்கின்றவன் என்ற பழி தீர இத்தலத்தை அடைந்து நாற்புறமும் தீர்த்தம் அகழ்ந்து தான் நடுவே இருந்து தவம் செய்ய இறைவன் காட்சி கொடுத்தருளினுன் என்பதும், வில்வலன் வாதாபி ஆகியோரின் கொடுமைகளுக்கு அஞ்சித் தேவர்கள் இத்தலத்தில் சரண்புகுந்து வாழ்ந்தனர் என்பதும், இரக்தன் என்னும் அசுரன் கேசியால் கொல்லப்படும் வரையில் இங்குச் சிவபூசை செய்து வந்தான் என்பதும் இத்தலத் தைப்பற்றிய புராண வரலாறுகளாகும். முனிவர்களும் சித்தர்களும் மன்னர்களும் ஏனையோரும் வழிபட்ட பெருமைகள் பலவும் இத்தலத் திற்கு உள்ளன.

**கல்வெட்டுக்கள் :**

இத்தலத்தில் இராஜராஜசோழன் (கி பி 985 - 1012) இராசேந்திரசோழன் (கி. பி. 1012 - 1045) முதற் குலோத்துங்கன் (கி பி. 1(72 - 1117) மூன்றுங்குலோத்துங்கன் (கி. பி. 1178-1218) காலத்தனவும்பிறவும் உள்ளன.

உய்யவேண்டில் லெழுபோத நெஞ்சேயுய ரிலங்கைக்கோன்
கைகளொல்கக் கருவரை யெடுத்தானை யோர்விரலினுல்
செய்கைதோன்றச் சிதைத்தருள வல்லசிவன் மேயபூம்
பொய்கைசூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே.

— திருஞானசம்பந்தர்

தன்னைச் சரணென்று தாளடைந்தேன்றன் னடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கவொட் டான்சிவ லோகத் திருத்திடுமே.

— திருநாவுக்கரசர்

நலமி லாதானை நல்ல னேயென்றும் நரைத்த மாந்தரை யிளையனே
குலமி லாதானைக் குலவ னேயென்று கூறி னுங்கொடுப் பாரிலை
புலமெ லாம்வெறி கமழும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமரா தமருலக மாள்வதற் கியாதும் ஐயுற வில்லையே.

— சுந்தரர்.

கட்டுரை எண். 13.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit., D. P. P. A,. D, U. N. I. U.,

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்தமான சரணர விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே. (11)

அ 'ஆனந்தமாய் என் அறிவாய்'

(1) தனது பேரின்பமாகவும், பேரறிவாம் மெய்யறிவாகவும் இருப்பவள் அபிராமியே என்கிறார்.

(2) முன் பாட்டு விளக்கத்தில் குறிப்பிட்டபடி அழியா முத்தி ஆனந்த வடிவினள் அம்பிகை, அவள் அடியார், அவள் வடிவாகவே ஆகி ஆனந்த பரவசம் எய்துகின்றனர். தெளிவான மெய்யறிவும் பெற்றுத் திகழ்கின்றனர். பிரமன் முதலானவர்களின் ஆனந்த நிலையினை அவளது ஆனந்த நிலை சிறு துளியாகச் செய்துவிடுகிறது என்பதனை இலலிதா சகஸ்ரநாமம் "ஸ்வாத்மானந்த லவீபூத பிரம்மாதி ஆனந்த ஸந்ததி:" என வருணிக்கிறது

(3) அவளை அகத்தே காணும் அடியார்களும் ஆனந்தபரவசம் எய்திவிடுகின்றனர். ஆகவே அவர்கள் "ஆனந்த நாதர்" என்ற தீட்சா நாமத்தால் குறிப்பிடப் படுகின்றனர். சரியானந்த நாதர் என்றும், பாசுராநந்த நாதர் என்றும், குங்குமாநந்த நாதர் என்றும் குறிப்பிடப்படுவதனுல் இதனை அறியலாம்.

(4) அப்பேரின்ப நிலை அவளே என அறிஞர்கள் அறிகின்றனர். எனவே திருமூலரும் தம் திருமந்திரத்தில் "அறிவார் பராசக்தி ஆனந்தம் என்பார்" என்கிறார்.

(5) மணிவாசகரும் இறைவனை "அத்தன் ஆனந்தன்" என்று அழைக்கின்றார்.

(6) அழகுக் கடலான அவளது பெருமையினைக் குறிக்கும் ஆதிசங்கரரின் நூல் "சௌந்தரிய லகரி" எனப்பட்டது. அது போல், ஸ்ரீ அப்பய்ய தீட்சிதரின் தம்பி பேரரும், திருவிளையாடல் புராணத்தை வடமொழியில் இயற்றியவருமாகிய ஸ்ரீ நீலகண்ட தீட்சிதர், ஆனந்தக் கடலாகிய அன்னையினைக் குறித்த தனது நூலுக்கு "ஆனந்த ஸாகர ஸ்தவம்" என்றே பெயரிட்டார்.

(7) "அண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி ஆனந்த மான பரமே" எனவும், "ஆனந்த ரூபமயிலே!" எனவும் தாயு மானவர் இறைவனையும் இறைவியையும் ஆனந்த வடிவாய் அழைக் கின்றார்.

(8) ஆனந்த வடிவான பரம்பொருளிடமிருந்தே அனைத்தும் தோன்றின என்ற கருத்தில் தைத்ரீய உபநிடதம் "ஆனந்தோப்ரம்ம இதி வ்யஜாநாத்" எனக்குறிப்பிடுவதனை அந்தாதி உரையாசிரியருள் ஒருவரான திரு. சண்முகநாதன் அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள்.

(9) அதே இறைவி அறிவு வடிவாகவும் விளங்குகிறாள். "சித்ரூபி" என்றும், 'சித் - ஏக - ரஸ - ரூபிணி' என்றும் சகஸ்ர நாமம் குறிப்பிடும். "வாலறிவன்" என்ற வள்ளுவர் வாய்மொழி முதல், அறிவே கடவுள் என்ற பகுத்தறிவாளரின் புதுமைக் குரல் வரை அனைத்தும் இதனை ஒத்த கருத்துக்களே.

## ஆ. நிறைந்த அமுதமுமாய்

(1) அனைத்துயிர்களிடத்தும் உயிர்ச்சக்தியாகி நிறைந்தவளும் அம்பிகையே

(2) அமுதம் என்பது சாவாமருந்தென்றும், உயிர் நிலைத்திருக்க இன்றியமையாத ஜீவசக்தி என்றும் பொருள்படும். அன்னையே எங்கும் ஜீவசக்தியாய் நிறைந்து உயிர்களிடத்தும் விளங்குகிறாள்.

(3) அவளது திருவடிகளிலிருந்து பெருகும் அமுத ரஸமே எழுபத்திரண்டாயிரம் நாடிகளிலும் பாய்ந்து உயிரூட்டுகிறது என யோகநூலார் விளக்குவர். அணுக்கள்தோறும் உயிரூட்டும் அமுத மாய் வியாபித்திருப்பதால் "நிறைந்த அமுதமுமாய்" என்றார்.

(4) குண்டலினி யோகிகளுக்கு மேலெழும்பும் சக்தி சகஸ்ர கமலத்தில் அருட்சக்தியாகி அமுதப் பெருக்காகி அவர்களின் உடலை வைரயாக்கையாக ஆக்குகிறது. அவ்வாறு நிறையும் அமுதமானவள் அன்னை

(5) சந்திரமண்டலத்தில் அமுதம் நிறைந்திருக்கிறதென்பது பண்டைய நூல்மரபு. அப்படி மதிமண்டலத்தில் அமுதமாக நிறைபவள் அன்னையே.

(6) உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத நீரினையே அமுதம் என்பர். "தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று" என்பார் வள்ளுவரும். உலகவழக்கில் நீரினைக் "கங்காமிர்தம்" என்று அழைப்பதுண்டு. உலகில் மனிதனின் உயிர்வாழ்க்கைக்கு அவசிய மான நீராக எங்கும் நிறைபவள் அன்னையே.

(7) உரிய பருவத்தில் பாலமுதமாகி, தாயின் மார்பகத்தில் நிறைபவள் அன்னையே

(8) திருக்கடவூரில் வைத்திருந்த அமுதகலசமே பின்னர் சுயம்பு லிங்கமாயிற்று என்பது தல வரலாறு. அக்கலசத்தில் அமுத மாய் நிறைந்தவளும் அவளே.

(9) உயிரினுக்கு உயிராக நிறைந்த இறைவனை "அத்தன், அமுதன்" என்றும், 'ஆரமுது' என்றும் மணிவாசகர் போன்றோர் அழைத்திருப்பதையும் அறிவோம்.

## இ வானந்தமான வடிவுடையாள்

(1) ஆகாயம் ஈறாகவுள்ள பஞ்சபூதங்களையே தன் வடிவாகக் கொண்டவள்.

(2) "வியத் - ஆதி - ஜகத் - பிரஸூ:" ஆகாயம் முதலான உலகினைப் படைத்தவள் என்று சகஸ்ரநாமம் கூறும் "வானுதி பூதமாய்" என்பார் தாயுமானவர். இவ்வாறு வானத்தை முதல் 'பூத' மாகவே கூறுவர். ஆனால் அபிராமிபட்டர் "வானந்தம்" என்று ஆகாயத்தை ஈறாகக் கூறுவது ஏன்?

யோக நூலின்படி குண்டலினிசக்தி ப்ருதிவித் தானமாகிய மூலாதாரத்தில் தொடங்கி ஆகாயத்தானமாகிய விசுத்திக்குமேல் எழும்பிச்செல்கிறது. அம்முறைக்கேற்ப ஆகாயத்தை ஈறாகக் கூறினர்.

மற்றும் திருநாளைப் போவார், அப்பைய தீட்சிதர் போன்றோர் இறுதியாகக்கலந்த சித் - அம்பலப் பெருவெளி இதயாகாசம் என்றும் தகராகாசம் என்றும் கூறப்படும் வானந்தத்தத்துவமே.

(3) வானந்தமான வடிவினை "பஞ்சபூதேசி" ஐம்பூதங்களின் ஆன்மாவாக இருப்பவள் எனச் சகஸ்ரநாமம் கூறும்.

(4) வானந்தமானவடிவு என்பது சர்வவியாபகமான - எங்கும் நிறைந்த வடிவினைக் குறிக்கும். இதனை "விராட்" ரூபம் என்பர். வானந்தமான வடிவிற்குக் கடலே மேகலையாக அமைகிறது. இதனை சகஸ்ரநாமம் "ஸாகர - மேகலா" எனக் குறிப்பிடுகிறது.

(5) நீலக்கருவானத்தை அன்னையின் பட்டுக் கருநீலப் புடவையாகவும், நட்சத்திரங்களை அதிற்பதித்த வையிரக்கற்களாகவும், சூரிய சந்திரர்களை சுட்டும் விழிகளாகவும், நீலக்கடல் அலைகளை அவள் நெஞ்சின் அலைகளாகவும் வருணிக்கும் பாரதியாரின் பாடல் இங்கு ஒப்பு நோக்கிச் சுவைக்கத்தக்கது.

### ஈ. மறைநான்கினுக்கும் தான் அந்தமான சரணாரவிந்தம்.

(1) நான்மறைகளின் தீர்ந்தமுடிவாக அவளது திருவடித் தாமரைகளே திகழ்கின்றன.

(2) அன்னையின் திருவடித் தூசுத்துகள் வேத மாதாவின் வகிட்டின் துவக்கத்தில் இட்டுக்கொள்ளும் உச்சித்திலகமாக விளங்குகிறது என்பதனை "ச்ருதி ஸீமந்த ஸிந்தூரீ க்ருத பாதாப்ஜதூலிகா" என லலிதா சகஸ்ரநாமம் அழகுபட வருணிக்கிறது.

### உ. தவளநிறக் கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

(1) அத்திருவடித்தாமரை வெண்ணிறமான காட்டினையே (மயானத்தினையே) தனது திருநடனத்திற்கு அரங்காகக் கொண்ட இறைவனது தலைமாலையாக விளங்குகிறது.

(2) அதாவது இறைவன் ஊடல்தீர்க்கும் காலத்தில் அன்னையின் திருவடிகளைத் தலையில் சூடுகிறான் எனப்பாடுவது நூல்மரபு.

(3) கலைமகளின் திருவடிகளைத் தனது கிரீடமெனக் கருதிப் பிரமன் தலையில் சூட்டிக்கொள்ளுகிறான் எனக் கம்பரின் சரசுவதி அந்தாதி கூறுகிறது.

(4) வள்ளிநாயகியாரின் திருவடிகளை முருகன் சூடுகிறான் என்பதைக் "குறமின் பதசேகரனே!" என்னும் கந்தரநுபூதியால் அறியலாம்.

(5) இறைவியின் திருவடிகளை இறைவன் தன் திருமுடியில் சூட்டிக் கொள்ளுகிறான் என்ற கருத்தினை இறைவனின் அடியார்களில் சிலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர்.

கண்ணனைக் குறித்து எட்டுச் சரணங்கள் உள்ள 'அஷ்டபதி' என்னும் பாமாலை சூட்டிய ஜெயதேவர் என்னும் கவிஞர்பெருமானும் அவ்வாறே இராதையின் திருவடியினைக் கண்ணன் சூடினான் எனக் கருதுவது இழுக்காகும் என எண்ணினார். தன் கவியில் கண்ணன் - இராதையின் லீலைகளைப் பல கோணங்களில் வருணித்தார் ஆனால் இராதையின் திருவடியினைக் கண்ணன் சூட்டிக் கொள்ளுகிறான் என்பதைமட்டும் தனது கவிதையில் எழுதமறுத்தார். முன்னோர் நூன்மரபு அதுவானாலும் அவர் அதனை ஏற்கவில்லை.

ஒருநாள் ஜெயதேவர் வீட்டிற்குவெளியே சென்றிருந்தபொழுது கண்ணபெருமான் ஜெயதேவரின் வடிவில் கவிஞரின் வீட்டிற்கு வந்தான். தன் கணவரே வீடு திரும்பிவிட்டார் எனக் கருதிய கவிஞரின் மனைவியிடம் தான் எண்ணெய் தேய்த்துக் குளிக்க விரும்புவதாகக் கூறினான் கண்ணன். எண்ணெய் கொணர்ந்து தந்தாள் கவிஞரின் மனைவி. பாதி எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கும்பொழுது எழுந்துசென்று கவிஞரின் சுவடியினை எடுத்தான் கண்ணன். அஷ்டபதி என்னும் அந்நூலின் ஒருபாடலின் ஏழாவது சரணத்தில் " இராதையின் திருவடிகளைக் கண்ணன் தன் திருமுடியில் சூட்டிக்கொள்கிறான் " என எழுதிவிட்டு மறைந்துவிட்டான் கண்ணன்.

வெளியே சென்றிருந்த ஜெயதேவர் வீடுதிரும்பினார். மனைவிக்கு வியப்பாய்ப்போயிற்று. சுவடிகளைப் பார்த்த கவிஞருக்கு அதைவிடப் பேராச்சர்யம் ! எண்ணெய்க்கையுடன் யாரோ தன் கவியில் 'இடைச் செருகல்' செய்திருப்பதைக் கண்டார். யார் எனது கவிதைச் சுவடியினை எண்ணெய்க் கையுடன் கையாண்டது என வினவினார்.

அப்போது கண்ணனின் குரல் வானொலியாய் எழுந்தது ! "கவிஞரே ! யானே நுமது சுவடியில் எழுதினேன் ! இராதையின் திருவடியினைச் சூடுவதாக எழுதுவதில் இழுக்கொன்றும் இல்லை" எனக் கூறியது அக்குரல். அதுமுதல் கவிஞரும் தன் கருத்தை மாற்றிக் கொண்டார்.

அவரது பாடல்களை 'Song of The Divine' என்ற தலைப்பில் எட்வின் ஆர்னல்ட் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இறைவன் எழுதிய அப்பாடலின் ஏழாவது சரணத்தைமட்டும் தன்னால் சரியாக மொழிபெயர்க்க இயலவில்லை என ஆர்னல்ட் அடிக் குறிப்பொன்று கொடுத்திருப்பது அறிஞருலகம் வியப்பெய்தும் செய்தியாகும்.

ஆம்! இன்றும் அடியார்கள் அப்பாடல்களைப் பஜனை பத்ததியில் பாடும்பொழுது, இறைவன் எழுதிய ஏழாவது சரணம் வரும்பொழுது கர்ப்பூரதீபாராதனை காட்டுவது வழக்கமாகிவிட்டது. (மற்றப்பாடல்களுக்கு எட்டாவது சரணம் பாடுகின்றபொழுது தீபாராதனை காட்டுவார்கள்)

(5) தவளநிறக்கான் என்றது திருவெண்காட்டினையே என்பர். தவளநிறம் என்பது முத்துப்போன்ற வெண்மை நிறம். (தவளம்-முத்து)

(6) அம்பலங்களில் ஆடும் இறைவன் பிரளய காலத்தில் அனைத்தும் தவளநிறப்பொடியாகி தன்னுள் ஒடுக்கம் எய்தியபின் தவளநிறக் காட்டையே ஆடும் அரங்காகக்கொண்டு ஆடுகின்றான்.

(7) 'எம்பிரான் முடிக்கண்ணியதே' என்ற சொற்றொடரின் உட்கருத்தை விளக்கப் புகுந்த உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

'இறைவன் கொன்றையினைத் தலையில் அணிவது ப்ரணவத்தை அணிவதாகும். ப்ரணவமே பரப்ரம்ம ஸ்வரூபிணியான அம்பாள். ஆதலால் அம்பாளின் சரணாரவிந்தத்தைப் பரமசிவனின் தலைக்கு மாலையாக வருணிக்கிறார் என்க.'

"மேலும் மகாப்ரளய காலத்தில் யாவும் ஒடுங்கிப் பரசிவம் ஒன்றே ஏகசேஷமாய் மிஞ்சியிருப்பார் என்றும், அப்போதும் அம்பாளும் அவனோடு ஒன்றி அவனுடைய மஹா கல்பதாண்டவ சாட்சியாய் இருப்பாள் (லலிதா சகஸ்ரநாமம் 232-வது நாமா! மஹேச்வர மஹாகல்ப மஹா தாண்டவ சாக்ஷிணீ) இந்த மஹாப் பிரளய நிலையே சுடுகாடு. அது பிரகாசாம்சம் ஆதலால் வெண்மையாகக் கூறப்படுகிறது. ஆக, தவளநிறக்கான் என்பது மஹாப்ரளயம் அங்கு அவன் ஆடும்போது அம்பாள் அவனுடைய தலையில் கொன்றைமாலையாக அமர்ந்து ப்ரளயதாண்டவத்துக்கு சாட்சியாய் இருப்பாள் என்பதுதான் இதில் அடங்கிய தத்துவார்த்தம்"

திரு. சண்முகநாதன் அவர்களின் இவ்விளக்கம் சாக்தர்களோடன்றிச் சைவர்களும் உடன்பட்டுப் பாராட்டும்விளக்கமாகும்.

இப்பாடலில் இறைவியின் ஆனந்தநிலை குறிக்கப்படுவதால் இப்பாடலின் பாராயண பலன் மனக்கவலைகள் நீங்கி மகிழ்ச்சி எய்துதல் ஆகும்

# திருக்குறுக்கை

வித்துவான் திரு. காளிங்கராஜ் எம். ஏ., பி, லிட்., பி. டி.

திருக்குறுக்கை என்னும் இத்தலம் மாயூரம் பட்டவிருத்தி சாலையில் கொண்டல் என்னும் இடத்திலிருந்து மேற்கே 3 கி. மீ. தொலைவில் உள்ளது மாயூரத்திலிருந்து 12 கி. மீ. இருக்கும். 3 கி. மீ. நடந்தோ. வண்டியிலோ செல்லவேண்டும். அய்யாவைய ஞற்றின் தென்கரையில் உள்ள அழகிய சிறு கிராமம்.

இக்கிராமத்தின் கீழ்பால் மேற்கு நோக்கிய சந்நிதியாகக் கோவில் உள்ளது. எட்டு விரட்டத் தலங்களுள் இது காமனை எரித்த தலம். தருமை ஆதீனத்திற்கு உட்பட்டது. அப்பர் பெருமானால் பதிகம் பாடப்பெற்ற தலம். அப்பர் பெருமான் இத்தலத்தை "பல்பூக் கோதி வண்டு அறையுஞ் சோலைக் குறுக்கை" என்று புகழ்ந்து இறைவனது திருவிளையாடல்களை அடுத்தடுத்துப்புகழ்கிறார். குறுக்கையீசன் தென்முகப் பரமாசாரியனாக ஞானம் உபதேசித்ததையும், மார்க்கண்டேயருக்காகக் கூற்றினைக் கடிந்ததையும், சண்டேசுரருக்குப் பதம் அளித்ததையும், திருவானைக்காவில் பணிசெய்த சிலந்தியினைக் கோச்செங்கட் சோழனாகப் பிறப்பித்ததையும், அர்ச்சனைப் பூக்குறையவே கண்மலர் கொண்டு அர்ச்சித்தவருக்கு அருள் செய்ததையும், கல்லினால் அர்ச்சனை செய்த சாக்கிய நாயனார்க்கு அருள்செய்ததையும், கண்ணப்பர்க்கு அருள்செய்த திறத்தினையும், திருமறைக் காட்டதனில் தீபத்தின் திரியினைத் தூண்டிய எலி மாபலிச் சக்ரவர்த்தியாகப் பிறக்க அருள் செய்ததையும், கணம்புல்லருக்கு அருள்செய்த திறத்தினையும், கயிலையை அசைத்த இராவணன் இசைமீட்டி அருள்பெற்றதையும், அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் நல்கிய பரிசினையும் வியந்து தம் பாடல்களில் பாடியுள்ளார்.

இக்கோவிலின் முன்பு அழகிய திருக்குளம் திரிசூல கங்கை என்ற பெயருடன் உள்ளது. மேற்குவாயிலே பெருங் கோபுரம். ஐந்து நிலைகளுடன் உள்ளது. சுமார் நூறு அடி உயரம் உள்ளது. கோபுரம் முழுவதும் சுதைச் சிற்பங்கள் செறிந்தது. தென்பால் தெட்சிணாமூர்த்தியின் பல வகைகள் உள்ளன. யோக தெட்சிணாமூர்த்தி, ஞான தெட்சிணாமூர்த்தி பிரமனுக்கு உபதேசித்த நிலையில்

அலட்சியமாக அமர்ந்த கோலம், சுகாசனமிட்டு விச்ராந்தியாக அமர்ந்த கோலம், உமையன்னையுடன் காட்சியளிக்கும் தெட்சிணா மூர்த்தி எனப் பல திருமேனிகள் உள்ளன.

மேற்குப்புறம் பஞ்சப் பிரசேதன ஜனனம் என்ற விசித்திர மூர்த்தம் உள்ளது. அதில் நான்கு முன்புற முகங்கள் உள்ளன. மேலே வராகமுகமும், இடப்புறம் கஜமுகமும், வலப்புறம் நரசிம்ம முகமும், நடுவில் மனிதமுகமும் உள்ள நின்ற கோலம். அதற்குத் தெற்கில் சதாசிவன் பஞ்சமுகங்களோடுகூடிய மூர்த்தியாகஉள்ளான். பிச்சாடனர், பைரவர், இன்பக் காட்சிகளோடு கூடிய சிற்பங்கள் முதலியன நிறைந்து கோபுரம் அழகாக உள்ளது. கோபுரத்தின் வாயிலின் தென்பக்கத்தில் " குறுங்கை மகாமுனி ரிஷி நித்தியம் சதாசொரூப " என்றகல்வெட்டுடன் ஒருகுறுமுனிவர்சிற்பம் உள்ளது.

கோபுரச் சுதைச் சிற்பங்களின் அமைதி முதலானவைகளைப் பார்த்தால் இக் கோபுரம் 12 ம் நூற்றுண்டாகக் காணப்படுகிறது. இக் கோபுரத்தையும் இதன் சுற்று மதிலையும் உள்ளடக்கிய பழங்கோவில் உள்ளது. ஒருக்கால் நாயக்கர் காலத்தில் இக்கோபுரம் புதிப்பிக்கப் பட்டிருக்கலாம். ஆனுல் இதில் உள்ள எழுத்துக்கள் நிச்சயம் பிற் காலத்தது, நாயக்கர் காலத்தது ஆகும்.

இக்கோபுரத்தினை அடுத்து, திறந்த முற்றம் உள்ளது. அங்கு எடுப்பான நந்தி, கொடிமரம், பலிபீடம் முதலானவை உள்ளன. இதனை அடுத்து நாயக்கர் காலத்தது என நம்புதற்குரிய செங்கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் வடபால் தென்புறம் நோக்கிய அம்மன் கருவறை உள்ளது. இக் கருவறை சோழர்காலத்தது அல்ல. சோழர் காலத்துக்குப் பின்னரேதான் அம்மன் கருவறை இது போல் வலப்புறம் அமைத்தல் பாணி நடைமுறையில் வந்தது. ஆதியில் அம்மனுக்குத் தனிக்கருவறையின்றியும், பின்னர் சோழர் காலத்தில் தனியாக ஒரே திசையில் கோயிலை அடுத்து வெளியில் கட்டுவதும் வழக்கமாக இருந்தது போகசக்தியம்மன் என அம்மன் திருமேனி சுவாமியின் கருவறையின் உள்ளேயே வைப்பது முதலில் இருந்தது. தனியான ஒரே திக்கில் உள்ள கோவில்களுக்கு உதாரணம் திருவையாறு, மதுரை, மாயூரம் முதலிய கோவில்களாகும், தஞ்சைக் கோவிலுக்குள் உள்ள அம்மன் சந்நிதி நாயக்கர்களது காலத்தது ஆகும். குறுக்கையின் அம்மன் கருவறை எண்பது ஆண்டுகட்கு முன்னர் புதிப்பிக்கப் பட்டதாகும்.

இதனை அடுத்து, சிறிய பழைய கோபுர வாயில் சாலை வடிவில் உள்ளது. இக்கோபுரத்தினை அடுத்துப் பெரிய செங்கல் மண்டபம் உள்ளது. அதனை அடுத்துப் பெரிய கருங்கல் மண்டபம் உள்ளது.

இது சோழர்காலப் பாணியிலுள்ளது. இதனை அடுத்து மூலக்கோவி லுள்ளது.

கருவறை வாயிலில் இரு துவாரபாலகர்கள் உள்ளனர். இருவரும் இரண்டு கைகளே உடையவர்கள். சிவலிங்கம் ஆவுடையார் நெடிய தான திருமேனி. பத்திரபீடம் அமைப்பு உள்ளது. பத்திர பீடத்தில் மன்மதன் எறிந்தமலர் என்ற புடைப்பான பகுதி உள்ளது.

திருச்சுற்றில் முதலில் கொற்றவை திருமேனி உள்ளது. அருமை யான சோழர்காலச்சிற்பம் திரிபங்கம் நிலையில் ஒருகாலில் பாரம் தாங்க – மறுகாலைத் தளர்த்தியுள்ளாள். மேல் இருகைகளில் சங்கு சக்கரங்களும் வலக்கை அபய கரமாகவும், இடக்கை தொடையில் ஊன்றியும் எருமையின் தலைமீது ஒசிந்து நிற்கிருள். சாந்தமும் அழகும் தவழும் முகம். இக்கொற்றவையின் இடப்புறம் இரு மன்னர்கள் முடித்தலையுடன் கூடியவராக உள்ளனர். வலப்புறம் ஓர் மன்னன் அவன் தேவியுடன் உள்ளான். அவனுக்கு அப்பால் அவனது அமைச்சன் போன்ற ஒருவன்பிரதிமை உள்ளது. இவர்கள் அனைவரும் காடுகிழாளை வணங்கியே நிற்கின்றனர்.

இக்கொற்றவையின் கோஷ்டத்திற்கு மேலுள்ள மகர தோரணப் பகுதியில் சண்டேசபதச் சிற்பம் சிறிய அளவில் காணப்படுகிறது. இது கங்கைகொண்ட சோழபுரத்துச் சண்டேசபதத்தினை நினைவு கூரத்தக்க அளவிலுள்ளது இதில் சிவன், உமை, கீழே சண்டேசன், அருகில் நந்தியெம்பெருமான் ஆகியோர்கள் உள்ளனர். சுற்றிலும் பூதகணங்கள், பூசுரர்கள் உள்ளனர்.

இதனையடுத்து, சுமார் ஓரடி உயரமுள்ள ரதத்தில் ஒரு மன்னன் செல்லும் சிற்பக்காட்சி உள்ளது. இது மன்மதன் என்று சொல்லப் படுகிறது. அதனை அடுத்த, புடைச்சிற்பமாக ஓர் கல்லாலமரம் உளது. அம்மரத்தினடியில் நான்கு முனிவர்கள் தவம் இயற்றுகின்றனர். மன்னன் போல் மாறன் நிற்கிருன். இவன் பாணம் எய்ய எண்ணி யுள்ளான் போலும். மரத்தடியில் தெய்வத்திருமேனி ஏதுமில்லை. ஆந்திகமாக- பாவனையாக – தெட்சிணமூர்த்தியின் யோகத்தினைக் கற்பனை செய்துகொள்ளவேண்டியது தான்.

கருவறையின் தூண்பகுதிகளில் சிறிய சிற்பங்களாக இராமா யணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இந்தஇடத்தில் வாலி சுக்ரீவ யுத்தம் உள்ளது. இரண்டு குரங்குகள் போரிடுகின்றன. இதனை அடுத்து நான்முகன் உள்ளான். இப்பாறையின்மேல் உள்ள மகர தோரணத்தில் இராவணன் கயிலைமலையை அசைத்தல் காட்சி யுள்ளது. மலை, சிவனுர் திருமேனி, மிருகங்கள் முதலியன உள்ளன.

இதனை அடுத்து. தூணில் கணையாழி கொடுத்தல் உள்ளது. சுக்ரீவன், அனுமன், இராமன், இலக்குவன் உள்ளனர், இருவரும் வில்வைத்துள்ளனர், மற்றொரு தூணில் மாகாளி, முண்டன் சண்டன் என்ற அசுரர்களோடு போரிடும் காட்சியுள்ளது. சண்டீசப்பெருமான் திருமேனி அழகுற உள்ளது.

கிழக்கிலுள்ள லிங்கோத்பர் இராஜராஜனுக்குப் பிந்திய பாணியில் விளங்குகிறார். அக்கோஷ்டத்தின் மேலுள்ள மகரதோரணத்தில் ஏகபாத மூர்த்தி உள்ளார். சிவன், பிர்மா, திருமால் ஒரேதிருமேனியில் உள்ளது. தூணில் இராமன், அனுமன் உள்ளனர். மற்றொருதூணில் கண்ணன் திருமேனியுள்ளது

தென்பால் தென்முகப்பரமாசாரியன் உள்ளான். அழகு தவழும் திருமேனி. காலடியில் பசு. புலி, யானை, மான் முதலிய மிருகங்கள் உள்ளன. சனகாதி முனிவர்கள் உள்ளனர். மேலேமகரதோரணத்தில் ஊர்த்துவ தாண்டவம் உள்ளது. சிவன் ஒரு காலைத் தலைக்கு மேலே தூக்கியுள்ளான். அருகில் நாட்டிய கோலத்தில் காளி உள்ளாள். பூதகணங்கள் சுற்றிலும் உள்ளன. பின்னர் நின்ற நிலையில் கணபதி உள்ளார்.

அதன் அருகில் ஒரே வரிசையில் அறுவர் சிற்பங்கள் புடைப்பாக உள்ளன. இவர்களை அஸ்வினி தேவர்கள் என்கிறார்கள். அது சரியானதாக இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தோற்றத்தினை உடையவனாக உள்ளான். சிலர் குள்ளம் சிலர் நெடியவர். கொண்டை வேறு வேறு அமைப்பு. வேட்டிக் கட்டு வேறு வேறு அமைப்பு. இவர்கள் கோவில் திருப்பணி செய்தவர்களாகவோ அல்லது அரசியல் அலுவலர்களாகவோ இருக்க வேண்டும். கல்வெட்டு ஏதும் அருகில் இல்லை.

இதனை அடுத்து தனிசந்நிதியாகக் கிழக்குநோக்கிய உட்கோவிலாக குறுங்கை விநாயகர் உள்ளார். இச்சிற்பத்தின் கைகள் குறுகியுள்ளது இதனைக் கொண்டே இத்தலம் குறுக்கை (வலித்தல் விகாரம்) எனப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இச்சிற்பம் இப்பகுதியைச் சார்ந்தது அல்ல. சிலையின் கல்லும் சுண்ணாம்புக் கல்லாகவும், முகம், காது, துதிக்கை முதலியன நம் சோழநாட்டின் பாணிக்குக் கொஞ்சமும் பொருத்தமானதாகவும் இல்லை இச்சிற்பம் வேறுநாட்டின் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம். இதேபோல் திருச்செங்காட்டங்குடியில் வாதாபியிலிருந்து சிறுத்தொண்ட நாயனார் எனப்பட்ட

பரஞ்சோதியார் கணபதியினைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்திருப்பது நினைவுகூரத்தக்கது. அருகில் ஓர் குறுங்கை முனியும் உள்ளார்.

இங்குள்ள காமதகன மூர்த்தி ஐம்பொன் திருமேனி. சுமார் 2 அடிக்கு மேல் உள்ளார். மிக அழகிய திருமேனி அலட்சியமாக ஒரு காலைமடக்கி மறுகால்மீது கையினைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். அருகில் உமையன்னை ஒயிலாக நிற்கின்றாள். இத்திருமேனிகளின் அழகு கொள்ளைகொள்ளும். மேற்குச் சுற்றில் இத்தலத்தின் விருட்சம் கடுக்காய்மரம் உள்ளது. நால்வர் திருமேனிகள், பைரவர், சூரியன் முதலானோர்கள் உள்ளனர். கோவில் இரட்டை மதில்களாகச் சூழப்பட்டுள்ளது.

இத்தலம் குறுங்கை விநாயகரால் குறுக்கை எனப்பெயர் பெற்றது என்று கூறப்படுகிறது. ஆனால் அப்பர் பெருமான் வாக்கில் இறைவனையே குறுக்கை வீரட்டனார் எனக் குறித்துப்பாடுகின்றாரே தவிர இங்குள்ள குறுங்கை விநாயகரைத் தம் பத்துப் பாடல்களில் ஒன்றில் கூடக் குறித்தாரில்லை. சம்பந்தப்பெருமான் செங்காட்டங்குடியில் கணபதியீச்சுரத்தைப் பத்துப் பாடல்களில் குறித்துப் போந்தார். உதாரணமாக "சிறைக் கொண்ட வண்டறையும் செங்காட்டங்குடியதனுள் கறைக்கொண்ட கண்டத்தான் கனபதீச் சுரத்தானே" எனக் குறிப்பிடுகிறார்.

இத்தலத்தில் கருவறையின் மேற்குவாயிலில் ஒரு கல்வெட்டு பாதி அழிந்தநிலையில் உள்ளது. அதில் முதல்வரியில் பாதி "சதயத் திருநாள் விருதராஜ பயங்கர வளநாட்டு பிரமதேயம் ஸ்ரீ இராஜ நாராயண சதுர்வேதிமங்கலம்" என்ற தொடர் உள்ளது. இதில் சதயத்திருநாள், முதலாம் இராஜராஜனைக் குறிப்பது. பின்வரும் "விருதராஜபயங்கரன்" முதலாம் குலோத்துங்கன் ஆவான். அவன் பெயரால் இப்பகுதி 11 ஆம் நூற்றாண்டில் விருதராஜ பயங்கர வளநாடு என வழங்கியமை தெரிகின்றது. அடுத்து 11 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவ்வூர் முதற்குலோத்துங்கனின் பெயர்களில் ஒன்றான இராஜநாராயண சதுர்வேதிமங்கலம் என வழங்கப்பட்டது தெரிகிறது. மறைவல்லார்க்கு இவ்வூர் முற்றூட்டாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. இக்கல்வெட்டு ஆராயப்பட வேண்டும்.

குறுக்கை வீரட்டானன் வேண்டிய நன்மை தருவான்.

# ஓமம் (Ajowan)

**தஞ்சை, திரு. நா. தனுக்கோடி,**
மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர்.

ஓமம் ஒரு செடி வகையைச் சேர்ந்தது. தென்னிந்தியாவில் அதிகமாய்ப் பயிரிடப்படுகிறது. அதன் புஷ்பங்கள் விரிந்த குடை போன்றது. புஷ்பங்கள் மலர்ந்து காயாகியபின் வித்தாகி ஓமம் கிடைக்கிறது.

ஓமத்தின் குணகுணம் உலகம் பூராவும் பரவி விளங்குகிறது. ஓமத்திலிருந்து "தைமால்" என்ற ஓமஉப்பு தயாரிக்கின்றனர். இது தீபன மருந்தாகவும் ஜீரணகாரியாகவும், வாயுவைக் கண்டிப்பதாகவும், கிருமிநாசினியாகவும், குடலிலுள்ள பூச்சிகளை ஒழிக்கவும் பயன்படுத்தப் படுகிறது. ஓமத்தை இடித்து ஜலத்தில் கலக்கி, வாலையில் காய்ச்சி வடித்தால் கிடைப்பது ஓமதீநீர். இது அஜீரணம், மந்தம்,வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு இவைகளை கண்டிக்க வல்லது. வறுத்த ஓமம் சிறிது இந்துப்பு கலந்த சூர்ணத்தைச் சூடான ஜலத்துடன் விழுங்கினால் ஜீரண சக்திக்கு உதவியாய் இருக்கும்.

ஓமத்தைத் தூள்செய்து சூடு தாங்கும் கண்ணாடிப்பாத்திரத்தில் போட்டு மூன்றில் ஒருபங்கு துளசி சேர்த்து, கொதிக்கும் வெந்நீர் விட்டு மூடவும். ஆறியபின் வடிகட்டி உபயோகிக்கவும். மயக்கம், கிறுகிறுப்பு, சினுக்கு இருமல், ஜலதோஷம் இவைகளைக் கண்டிக்க வல்லது. குழந்தைகளுக்கு அளவாகக் கொடுக்கலாம்.

ஓமத்தைப் பொடித்து, தேங்காயெண்ணெயில் விட்டு, பதமாய் காய்ச்சி இறக்கி வடித்து, சூடம் ஓரளவு சேர்த்து, குப்பியில் அடைக்கவும். ஆஸ்துமா, நிமோனியாவில் மூச்சடைப்பு இருக்கும் போது மேற்சொன்ன தைலத்தை மார்பு, விலாப்புறம் தடவக் குணம் கொடுக்கும். ஓமத்தைச் சற்று வறுத்துச் சூடாக ஒத்தடம் கொடுப்பதும் நன்மை பயக்கும். பாக்குடன் ஓமம், லவங்கப்பட்டை இடித்து வைத்துக்கொண்டு தாம்பூலத்துடன் போட்டுக் கொள்வதும் தேகத்திற்கு ஆரோக்கியம் தருவதாகும்.

பொடிந்த ஓமத்தை மெல்லிய துணியில் முடிந்து அடிக்கடி முகர்ந்துவந்தால் மூக்கடைப்பு ஜலதோஷம் நிச்சயமாய் நிவர்த்தியாகிறது. கீல்வாயு, முடக்குவாதங்களுக்குப் பூட்டுவலியைக் குறைத்து, சமனம்செய்ய ஓமத்தை அரைத்து இளம்சூடாக்கிப் பற்றுபோடலாம்.

நற்குணங்களை ஒருங்கே தன்னுள் அடக்கிச் சிறந்து நிற்பதான ஓமம், மருத்துவத்தில் ஓம் என்னும் சொல்லுக்கு நிகராய் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் நெறி விளக்கம்

## பேசா அனுபூதி

சிவமணி, புலவர். திரு. ம. சிவசம்பு பி. லிட்.

துணைச் செயலாளர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம், நெல்லை.

எக்காலம் மெய்க்கே இரையிடுதல் இற்றிடுமோ
எக்காலம் இக்கரணம் இற்றிடுமோ — எக்காலம்
**பேசாநு பூதி** பிறந்திடுமோ என்னுளத்தில்
ஆசானே சொக்கநா தா.

— சொக்கநாதவெண்பா - 40.

அநு - உடன். பூதி - ஆதல். அநுபூதி - உடன் ஆதல். ஆன்மா இறைவனுடன் ஒன்றுவது அநுபூதி. ஒன்றுவதால் உண்டாவது அநுபவஞானம் ஆகும்.

பாசஞானத்தையும் பசுஞானத்தையும் அகற்றிப் பதியை அவன் அருளால் உணர்ந்து அப்பரமன் அடிக்கீழ் நின்று உணரும் மெய் யுணர்வே அநுபூதியாகும்.

இந்த அநுபூதியைப் பெறுவது எப்படி? அதுவே நம் சிந்தனை. அதற்கு வழிகாட்டுகிறார் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

அநுபூதிக்கு ஆசை தடையாக இருக்கிறது.

இறைவனிடம் சேர அன்புதான் வைக்க வேண்டும். ஆசை வைக்கக் கூடாது.

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்

—திருமந்திரம் – 2515.

சங்கிலி போன்றது ஆசைகள். இரும்பு வளையங்கள் பல சேர்ந்தது சங்கிலி. அதுபோல ஒவ்வொரு பொருளிலும் உள்ள ஆசை

ஒவ்வொன்றும் வளையமாகும். பல வளையங்கள் சேர்ந்து ஆசையாகிய சங்கிலி நீளமாகிறது. ஆசையான சங்கிலி முற்றிலும் நீங்கினல்தான் நாம் இறைவனுடன் ஒன்றுபட முடியும்.

' ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே '

— கந்தர் அநுபூதி – 43.

என்கிருர் அருணகிரிநாதர். நிகளம் - சங்கிலி. ஆசையாகிய சங்கிலி பொடிப்பொடியாகத் துகள்பட்டொழிந்தபின் பேசா அநுபூதி பிறந்தது என்று அடிகளார் கூறுகின்ருர்.

பேசா - என்றதை வாய்பேசாத என்று கொள்வது சரியன்று. பஞ்ச வாக்குகளும் அடங்கிய பரம மோனநிலையாகும்.

பேசாத மோனநிலை பெற்றன்ரே நின்னருளாம்
வாசாம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே.

— தாயுமானர்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பேசா அநுபூதி பிறக்க வழி சொல்லுகிருர். திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதப் பெருமானே! ஒளிமயமானவனே! ஞானமும் பெரிய ஆனந்தமுமே உருவான வடிவுடையவனே! எனது உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஆசையாகிய பேயைத் துரத்து; சொல்ல முடியாத பேசாநுபூதியை எனக்குக் கொடு என்றுகேட்டார். அவருக்குக் கேட்டது கிடைத்தது. அம்மெய்யுணர்வு சொக்கநாத வெண்பாவாக மலர்ந்தது.

பேசா அநுபூதி பிறக்க எனதுளத்தில்
ஆசா பசாசை அகற்றுவாய் — தேசாளும்
சிற்பரா நந்தா! திருவால வாயுறையும்
தற்பரா! சொக்கநா தா!

— சொக்கநாத வெண்பா — 9.

நாமும் இப்பாடலைப்படித்து அவன் அருள்பெறுவோம்.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு தைத்திங்கள் 8 ஆம் நாள் ( 21—1—81 ) புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை திருப்புகலூர் ஸ்ரீ கருந்தார்குழலியம்மை உடனாகிய ஸ்ரீ அக்னீசுவரருக்கும், அக்கோயிலுள் விளங்கும் திரு வர்த்தமானீச்சரம் ஸ்ரீ மனோன்மணியம்மை உடனாகிய ஸ்ரீ வர்த்த மானீசுவரருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் அவர்களும் ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்பசுவாமிகளும் 'அப்பூதியடிகள்' 'அப்பரின் முக்கரணத் தொண்டு' என்ற தலைப்புக்களில் முறையே விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பட்டன. அச்சிடப்பெற்ற தலப்பதிக வெளியீடு வழிபாட்டில் கலந்துகொண்ட அன்பர்களுக்கும் உள்ளூர்ப் பெருமக்களுக்கும் வழங்கப்பெற்றன.

## திருச்சி மௌனமடத்தில்

## ஸ்ரீ மௌனகுரு—ஸ்ரீ தாயுமான சுவாமிகள் குருபூஜை

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருச்சி மலைக்கோட்டை மௌனமடத்தில் மௌனகுருவிற்கும் அவர்களிடம் அருளுபதேசம் பெற்று அருளனுபவப் பாடல்கள் அருளிய தாயுமான சுவாமிக்கும் அவர்கள் திருவருட்பேறெய்திய விசாக நட்சத்திரத் திருநாள் 29—1—'81 வியாழக்கிழமையன்று குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. மலைக்கோட்டை ஸ்ரீ மாணிக்கவிநாயகர், ஸ்ரீ உச்சிப் பிள்ளையார், ஸ்ரீ மட்டுவார்குழலம்மை, ஸ்ரீ தாயுமானேசுவரர் முதலிய மூர்த்திகளுக்கும், ஸ்ரீ மௌனகுருவிற்கும், ஸ்ரீ தாயுமான சுவாமிக்கும் காலை 9 மணியளவில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்ந்தன. பகல் 11 மணி அளவில் குருபூஜையும் அடுத்து மாகேஸ்வரபூசையும் நடைபெற்றன.

மாலை 6 மணி அளவில் மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் பட்டிமண்டப நிகழ்ச்சி தொடங்கியது. திருமுறைப் பாராயணத்திற்குப்பின் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌனமகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரைவழங்கினார்கள். செந்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தி பட்டிமண்டப நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார்கள். புத்தனும்பட்டி, நேரு நினைவுக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. அ. வ. இராசகோபாலன் எம்.ஏ., பி டி. அவர்கள் "சைவசமயத்தில் தாயுமானவர் வகுத்த நெறி முறைகள் மரபுவழிப்பட்டனவே! புதுநோக்கில் மலர்ந்தனவே!" என்னும் பொருள்பற்றி அமைந்த பட்டிமண்டப நிகழ்ச்சியை நடுவராயிருந்து நிகழ்த்தினார்கள். தருமபுரம் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., திருச்சி திரு இரா இராமமூர்த்தி எம். ஏ, புலவர் திரு. மு வைத்தியநாதன் ஆகியோர் மரபுவழிப் பட்டனவே என்னும் பொருளிலும். புலவர். திரு. மு. கணபதி, இலஞ்சி திரு அ இ. முத்துக்குமாரசாமி, புலவர் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட். ஆகியோர் மரபுவழிப்பட்டனவே என்னும் பொருளிலும் வாதிட்டனர். நடுவர் தம்முடிவுரையில் இருதிறத்தினரின் வாதங்களைச் சீர்தூக்கி "மரபுவழிப்பட்டவையே" எனத் தீர்ப்பு வழங்கினர். நன்றியுரைக்குப்பின் அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்பட்டது அன்பர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## உலகத்தமிழ் மாநாட்டில்

## தருமையாதீன நூல்வெளியீடு

மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் தமிழிலும் – ஆங்கிலத்திலுமாக இருநூல்கள் ஆதீனச் சார்பில் வெளியிடப்பெற்றன.

தருமையாதீனக்குருமுதல்வர் ஸ்ரீகுருஞானசம்பந்தர்-மதுரையில் உள்ளொளி பெற்ற தத்துவ ஞானி. இவர்கள் வாழ்வையும் வாக்கையும் விளக்கிக்கூறும் Guru jnana Sambandhar – The Philosopher Inspired by Madurai என்ற நூலைத் திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள் ஆங்கிலத்தில் வடித்துத்தந்தார்கள். இந்நூல் மதுரையில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பெற்றவுள்ளுணர்வையும், அவர்கள் வரலாற்றையும் இனிது விளக்குவது. தருமையாதீனம் கடந்த 450 ஆண்டுகளாக இயற்றிவந்திருக்கும் பல்வேறு தமிழ்ப்

பணிகளைத் 'தமிழ்வளர்க்கும் தருமபுரம்' என்ற தலைப்பில் ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர், திரு. இரா. செல்வக் கணபதி இனிய – எளிய தமிழில் எழுதியுள்ளார்.

இவ்விரு நூல்களும் 9—1—81 அன்று மதுரைப் பல்கலைக்கழக அரங்கில் வெளியிடப்பெற்றது. இலக்கிய ரசிகமணி, முன்னாள் உயர்நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்கள் இவ்விருநூல்களையும் அறிமுகப்படுத்தினர். பேராசிரியர், திரு. இரா. செல்வக்கணபதி நூற்கருத்துக்களை விளக்கிப்பேசி முதற்பிரதியைத் தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் வழங்கினர். மாநாட்டுக்கு வந்திருந்த 640 பிரதிநிதிகளுக்கும் இவ்விருநூல்களும் ஆதீன அன்பளிப்பாக வழங்கப்பெற்றன. இவற்றைப் பெற்றுக்கொண்ட பன்னாட்டுமொழி அறிஞர்கள் ஆதீனப்பணிகளைப் பாராட்டி நன்றிகூறினர்.

மாநாட்டுப்பேராளர்களுக்கு 13-1-81 அன்று தஞ்சையில் நடைபெற்ற வரவேற்பு விழாவிலும் ஆதீனப் பிரதிநிதியாகப் பேராசிரியர், திரு. இரா. செல்வக்கணபதி கலந்துகொண்டார். பேராளர்கள் அனைவருக்கும் ஸ்ரீகுருஞானசம்பந்தர் அருளிய சிவபோகசாரம் என்ற நூல் வழங்கப்பெற்றது. பிரதிநிதிகளுக்குப் பரிசாகத் தஞ்சாவூர்த் தட்டுக்களை வழங்கியதிலும் ஆதீனம் பங்கேற்றது. தருமையாதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளான திரு. S. திருஞானசம்பந்தன் திரு. S. தண்டபாணி குழுவினர் இன்னிசைக் கருவிகளுடன் பேராளர்களுக்குமுன் தேவாரப்பண்ணரங்குநிகழ்த்தி மகிழ்வித்தனர்.

## தருமைக்கு அமெரிக்க நாட்டு

## தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகள் வருகை

அமெரிக்க நாட்டு ஹவாய்த் தீவுகளுள் ஒன்றான கப்பா என்ற இடத்தில் "கடவுள் கோயில்" என்ற பெயரில் சிவன் கோயில் நிறுவிச் சைவசித்தாந்தத்தைப் பரப்பிவரும் தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகள் அவர்களும் அவர்களின் 38 சீடர்களும் இலங்கை – இந்தியச் சுற்றுப்பயணம் செய்தபோது 30—1—81 வெள்ளிக்கிழமை அன்று தருமையாதீனத்திற்கு வருகை தந்தார்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காபரமேஸ்வரி ஆலயமுகப்பில் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மிதுர்க்கா தேவி, ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில் சிறப்புவழிபாடுசெய்விக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைச்

சுவாமிகளும், அவர்சீடர்களும் தரிசித்து உரையாடினர். சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசனம்செய்தபோது பொன்னுடைபோர்த்தி ஆதீன வெளியீடுகளாகிய தோத்திர–சாத்திநூல்களை அருட்கொடையாக வழங்கியருளினர்கள். உரையாடியபோது திரு. மு. அருணசலம் எம். ஏ. திரு. N. K. மூர்த்தி, திரு வை. ஆறுமுகம் பிள்ளை ஆகியோர் உடனிருந்து உரையாடல்களை மொழிபெயர்த்துக் கூறினர்கள்.

நண்பகல் சுவாமிகளுக்கும் அவர்களது சீடர்களுக்கும் பகல் விருந்து அளிக்கப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் தருமை யாதீனத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் ஆதீனக்கல்வி நிலையங்களின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்பின் போது சீகாழி தேவஸ்தான ஓதுவார் திரு. எஸ். திருஞானசம்பந்தன் இறைவணக்கமாகத் தேவாரப்பாடல்களைப்பாடினர். திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணசலம் அவர்கள், இறைவணக்கமாகப் பாடப்பட்ட பாக்களை ஆங்கிலத்தில் விளக்கி வரவேற்புரை வழங்கினர். அடுத்து, ஆதீனக் கல்லூரி முதல்வர் அச்சிடப்பெற்ற வரவேற்பிதழை வாசித் தளித்தார். வரவேற்புக்கு நன்றிகூறும் பாங்கில் தவத்திரு. சுப்பிர மணிய சுவாமிகள் ஆதீனப்பணிகளைப்பாராட்டித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். திரு. வை. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் அதனைத் தமிழில் மொழிபெயர்த்தார்கள். மெய்கண்டார் அவதாரத் தலமாகிய பெண்ணாகடத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந் தருளியபோது பெண்ணாகடத்துச் சைவப்பெருமக்கள் வரவேற்புரை வைத்து வழங்கிய ஸ்ரீ மெய்கண்டார் திருவுருவம் அமைந்த வெள்ளிப் பேழையை, சுப்பிரமணிய சுவாமிகள் தருமையாதீனத் திருமடத்திற்கு விஜயம்செய்ததன் நினைவாக ஹவாய்த்தீவில் சைவசித்தாந்த சர்ச்சில் என்றும் இருத்தற்பொருட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசீர்வாத மாக வழங்கியருளினர்கள். வேலூர் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் ஆங்கிலத்தில் நன்றி கூறினர்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தம் திருக்கரங்களால் தவத்திரு. சுவாமிகள் விடைபெறும்போது சுந்தர வேடம் அணிவித்துச் சுவாமிகளைச்சிறப்பித்து, ஆசி வழங்கினர்கள். மறுநாள் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சென்றபோதும் சிறந்தமுறையில் வரவேற் பளித்து வழிபாடு செய்விக்கப் பெற்று ஸ்ரீ சுவாமிகளும் அவரது சீடர் களும் வழியனுப்பிவைக்கப்பெற்றனர்.

## வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்குவேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 1-2-81 முதல் 10-2-81 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில் காலை மாலை விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன, 9—2—81 திங்களன்று பெருமான் புஷ்பத்தேரில் பவனிவரும்காட்சியும் மறுநாள் சித்தாமிர்தத் தீர்த்தத்தில் கடைச்செவ்வாய்த் தீர்த்தவிழாக் காட்சியும் நிகழ்வுற்றன நாடோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதியில் தருமையாதீனக் கல்லூரி - உயர்பள்ளி ஆசிரியர்கள் முருகப் பெருமான் அருள்நூல்களைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர் தேவஸ்தானத் திருமுறைப்பணியாளர், திருமுறைக்கலாநிதி, திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்களின் திருமுறைப் பாராயணமும் நாடோறும் நிகழ்ந்தது.

### திருக்கடவூரில்

## ஸ்ரீ அபிராமி பட்டர் அருள்பெறு திருநாள்

## மகந்யாச பூர்வக ஏகாதச ருத்ராபிஷேகம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிக்கு 4—2—81 புதன்கிழமை ஸ்ரீ அபிராமி பட்டர் அருள்பெற்ற நாளாகிய தை அமாவாசைநாளில் காலை 10 மணியளவில் மகந்யாச பூர்வக ஏகாதச ருத்ராபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும், இரவு ஸ்ரீ அபிராமியம்மைக்கு விசேஷ அலங்காரமும் நவசக்தி அருச்சனையும் அபிராமி அந்தாதி பாராயணமும் நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். உலக நலம்கருதிய இவ்விழாவை மதுரைசிவகாமியில் அதிபர் திரு. கருமுத்து சு. சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள் தம் உபயமாகச் செய்து வருகிறார்கள் விழாவில் அன்பர் பலர் கலந்து கொண்டு தரிசித்துப் பயன் பெற்றனர்.

## ஸ்ரீ ஐயப்பன் திருவுருவம் தருமைக்கு வருகை

சென்னை. இராஜா அண்ணாமலைபுரத்தில் எழுப்பப் பெற்றுள்ள ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயத்தில் பிரதிட்டை செய்யும் பொருட்டு, ஐம்பொன்னால் செய்யப்பெற்று எடுத்து வரப்பெறும் ஸ்ரீ ஐயப்ப

சுவாமிகள் திருவுருவச்சிலை 25—1—81 நாகர்கோவிலிலிருந்து புறப்பாடாயிற்று இடைவழியில் அன்பர்கள் வரவேற்று வழிபாடு ஆற்றுகின்றனர். 6—2—'81 வெள்ளிக்கிழமை பகல் 2 மணிக்குத் தருமையாதீனத்திற்கு வருகை புரிந்தபோது ஊர் எல்லையிலேயே தருமை ஸ்ரீ சண்முகம் வளைவினருகில் ஆதீனச் வாயிலில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பெற்றது.

தருமையாதீனக் கல்விநிலையங்களாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தேவாரபாடசாலை, வேதசிவாகமபாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் ஆதீனப் பணியாளர்களும், ஆதீன அடியவர்களும் குழுமியிருந்து வரவேற்றனர். மங்கலவாத்தியம் முழங்க, வேதஓசையும் திருமுறை இசையும்ஒலிக்க, ஸ்ரீ ஐயப்பன் திருவுருவச்சிலை ஊர்வலமாக அழைத்துவரப்பெற்றது; ஆதீனமடாலய வடக்கு முகப்பிற்கு வந்ததும் ஸ்ரீ ஐயப்பமூர்த்திக்கு மகாநிவேதனத்துடன் பட்டுச் சார்த்தித் தீபாராதனை நிகழ்த்துவிக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாட்டின்போது எழுந்தருளியிருந்தார்கள். உடன் வந்தவர்களுக்கு ஆதீனத்தில் மதிய உணவு அளிக்கப்பெற்றது. பிற்பகல் 4 மணியளவில் தருமையிலிருந்து புறப்பாடாயிற்று. மக்கள் வழியனுப்பி வழிபட்டுப் பயனடைந்தனர்.

தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

# மார்கழிமாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மீ (சென்ற இதழ் தொடர்ச்சி) 17 ஆம்நாள் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில் முசுகுந்தார்ச்சனை வழிபாடு, 18 ஆம்நாள் திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரர் திருக்கோயில், 19 ஆம்நாள் மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரர் திருக்கோயில், 20 ஆம்நாள் கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரர் திருக்கோயில் மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரர் திருக்கோயில், 21 ஆம்நாள் குத்தாலம் (திருத்துருத்தி) ஸ்ரீ உத்த வேதீசுவரர் திருக்கோயில், 22 ஆம் நாள் திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்) ஸ்ரீ சிவலோகத்தியாகர் திருக்கோயில். 23 ஆம் நாள் திருக்கோளிலி (திருக்குவளை) ஸ்ரீ தியாகராசசுவாமி திருக்கோயில், திருக்காருயில் ஸ்ரீ நடுதறியப்பர் திருக்கோயில், 24 ஆம் நாள் திருப்பறியலூர் (பரசலூர்) ஸ்ரீ வீரட்டேசுவரர் திருக்கோயில் 25 ஆம் நாள் திருநெடுங்களம் ஸ்ரீ நித்தியசுந்தரர் திருக்

கோயில், திருக்கற்குடி (உய்யக்கொண்டான்) ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில், திருச்சிராப்பள்ளி ஸ்ரீ தாயுமானேசுவரர் திருக்கோயில், 26 ஆம் நாள் திருச்செம்பொன்னூர் கோயில் ஸ்ரீ குமரகோயில், 27 ஆம் நாள் திருக்கடவூர் அமிர்தகடேசுவரர் திருக்கோயில் திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரர் திருக்கோயில், 28 ஆம் நாள் மாயூரம் சின்னக் கடைத்தெரு விநாயகர் திருக்கோயில், கண்கொடுத்த விநாயகர் திருக் கோயில், சூரியனூர் கோயில் சூரியன் முதலிய நவக்கிரகங்கள் திரு மங்கலக்குடி ஸ்ரீ புராணேசுவரர் திருக்கோயில், 29 ஆம் நாள் திருப் பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையப்பர் திருக்கோயில், திருவாப்பாடி - திருச் சேய்ஞலூர் ஸ்ரீ சக்திபுரீசுவரர் திருக்கோயில், தை முதல்நாள் மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயில், குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய தலங்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடு செய்தருளினார்கள்.

திருப்பனந்தாள் வழிபாட்டின்போது ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசி வாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்று, கொலுவில் எழுந்தருளச்செய்து வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் தரிசித்து அருட்பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள். தல வழிபாட்டின் போது ஆங்காங்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப் பெற்றன.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

### திருநெல்வேலி ( கிளை )

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றக்கிளை 14—11—80 அன்று திருநெல்வேலி சந்திப்பு – தருமையாதீனத் திருமடத்தில் தொடங்கப் பெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கிளைமன்றத்தைத் தொடங்கிவைத்து அருளுரை வழங்கினார்கள். மாதந்தோறும் திரு விளக்கு வழிபாடு, வாரவழிபாடு, பாலர்பள்ளி ஆகிய பணிகள் நடைபெற்றுவருகின்றன. மருத்துவப்பணியும் தொடங்கி நடைபெற உள்ளது. திரு. L. S. மார்த்தாண்டம் அவர்கள் தலைவராகவும், திரு. V. S. V. மணி அவர்கள் துணைத் தலைவராகவும், திரு. S. சைலப்பன் அவர்கள் செயலாளராகவும், திரு. T. V. சங்கர குமாருப்பிள்ளை அவர்கள் இணைச்செயலாளராகவும், புலவர் திரு. ம. சிவசம்பு பி. லிட். அவர்களும் திரு. ஜெகந்நாதன் அவர்களும் துணைச் செயலாளராகவும் விளங்கிப் பணிபுரிந்து வருகின்றனர். செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது பல சமயப்பணிகளும் சமுதாயப் பணிகளும்செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

### திருவதிகை ( கிளை )

இப்பணிமன்றத்தின் சார்பில் ஸ்ரீ அருணந்திதேவசிவாசாரியாரின் திருநாளாகிய பூரத்திருநாள் சிறப்பு வழிபாடு மாதந்தோறும் நடை பெற்றுவருகிறது. இம்மாதம் பூரத்திருநாளன்று 28—1—1981 புதன் கிழமை மாலை 6 மணியளவில் விசேஷ அபிஷேக ஆராதனைக்குப்பின் வித்துவான் திரு. ந. சண்முகசுந்தரதேசிகர் சிவஞானபோத மூன்றும் சூத்திரத்திற்கு விளக்கம் அளித்து விரிவுரை நிகழ்த்தினார்.

---

**கடிதம்**

### காஞ்சிபுரம்

## சிவனடியார் திருத்தல வழிபாட்டு யாத்திரை

* நாங்கள் 62 சிவனடியார்கள் 24—1—81 முதல் 28—1—81 வரை தலயாத்திரை சென்றிருந்தோம். கருப்பறியலூரிலும், குறுக்கை வீரட்டத்திலும் எங்கள் வழிபாட்டுக்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கருப்பறியலூர் சிவாசாரியார் வடமொழி யிலும் தென்மொழியிலும் வல்லவராக உள்ளார். அவர் தமிழில் சங்கல்பம் செய்து தமிழிலேயே அர்ச்சனை செய்துவைத்தது அற்புத மாக இருந்தது. இவரைப்போன்ற சிவாசாரியர்கள் எல்லா ஆலயங் களிலும் இருந்தால் சைவம் தழைத்தோங்கும் - தமிழொடு இணைந்து என்பது அடியேனின் விஞ்ஞாபனம்.

குறுக்கை வீரட்டம் கோயில் மிகவும் தூய்மையாக வைக்கப்பட் டிருந்தது. வழிபாடும் சிறப்பாக இருந்தது.

இவைகளை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பொன்னார் திருவடி களுக்குச் சமர்ப்பிப்பது எனது கடமை என்று கருதினேன்.

காஞ்சிபுரம்
30—1—81

C. V. சுந்தரராஜன்.
அமைப்பாளர்.

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**ரௌத்திரி ஞூ மாசி மீ 1உ முதல் 30உ முடிய.**

**( 12—2—1981 முதல் 13—3—1981 முடிய )**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | ல/ |
| சூ செ | இராசி | | ரா |
| பு சு கே | | | |
| | | | கு.சனி |

| | | | |
|---|---|---|---|
| சந் | சனி | சு | கு |
| | அம்ஸம் | | ரா பு |
| கே செ | | | |
| ல/ | | சூ | |

ரௌத்திரி ஞூ மாசிமீ 12உ குருவாரம் கார்த்திகை நக்ஷத்திரம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம்முதல் 19 நாழிகை 16 விஞடிக்கு மிதுன லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மகர ராசியிலிருந்து கும்பராசி சங்கிரமணமாக மாசிமாதப்பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலஞவது லோகமெங்கும் சுபிட்சம் ஏற்படும் தேசத்தில் பிரஜைகள் பொருளாதாரம் மிகுந்து உயர்வார்கள். தேசங்களில் ஜஞதிபதிகள் மந்திரிகள் நீதியாகவும் சிவதர்மமாகவும் பரிபாலனம் நடத்தி, பிரஜைகளை இரட்சிப்பார்கள். பிரஜைகள் ஜீவஞேபாயத் தொழில்களில் சிறந்து உணவு, உடை, இருப்பிட சௌகரியங்களுடன் இனிது வாழ்வார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களிலுள்ள சிவஞான குருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் குருவழியில் சிறந்துள்ள சிஷ்யகோடிகளுக்கு ஞானதீட்சைசெய்தருள் வார்கள். ஆதீனங்களில் சுவாமிகள் பக்தகோடிகளாகிய அடியார் களுக்கெல்லாம் ஆசிர்வதித்தருள்வார்கள். அன்னாரைத் தரிசிப்பவர் களின் ஜனனகால கிரகபாபம் சூரியனைக்கண்ட பனிபோல் விலகும். மங்களம் ஏற்படும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெறும். உற்சவ வைபவங்கள் சம்பிரதாயவழியில் வியரிசையாக நடைபெறும். பக்தர்கள் அனைவரும் தெய்வ தரிசனம் செய்து களங்கமற்ற சிந்தையுடையவர்களாகிச் சிரிய வாழ்க்கை நடத்துவார்கள்.

1. **மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼**
( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானங்கள் கணிசமாகவரும். பூஷணங்களின் பிராப்தியைத்தரும். சகோதரருக்கு உயர்வு ஏற்படும் பூமியில் இயந்திர சாதனங்களில் நற்பல பிராப்தியை ஏற்படுத்தும். திட்டமிட்டுள்ள காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும் தார புத்திரர்களின் சௌக் கியம் நன்முக இருந்துவரும். பிப்ரவரி 14, 15, 21, 22, 23, 24 மார்ச்சு 3, 4, 5, 6, 9, 10 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை அளிக்கும். பிப்ரவரி 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதி களில் மத்திம பலன் தரும்.

2. **ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**
( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமா னங்கள் எதிர்பார்த்தவகையில் வந்துசேரும் மார்ச்சு 10 உ ஆனுல் பெருமளவு தனம் கைக்குவந்துசேரும். சிவந்த வஸ்துவின் பிராப்தி யையளிக்கும். கால்நடைஜீவன் பிராப்தி கட்டிடப் பிராப்தியில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்முக இருந்து வரும். பிப்ரவரி 12, 13, 16 17, 18, 24. 25, 26, 27 மார்ச்சு 5, 6, 7, 8, 11, 12 தேதிகளில் தனதாயம் தரும். நன்மதிப்பை ஏற்படுத்தும். மார்ச்சு 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

3. **மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**
( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமா னங்கள் வந்துகொண்டிருக்கும். அளவுக்குமிஞ்சிய செலவும் ஆகும்.

செந்நெல் பிராப்தியளிக்கும். சகோதரருக்கு மேன்மை ஸ்திதி ஏற்படும். வீடு வாகனங்களின் பிராப்தியில் சௌகரியம் மேவிடும். தாரசௌக்கியம், புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 14, 15, 19, 20, 26, 27, 28 மார்ச்சு 1, 2, 7, 8, 9, 10 தேதிகளில் மிகுந்த நற்பலன் அளிக்கும். மார்ச்சு 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.**

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பணவருமானம் வரும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 24உ சுக்கிரன் பெயர்ச்சியால் கட்டிடம் வாகனம் போக்கியப்பொருள்களின் பிராப்தியில் நல்லன ஏற்படச் செய்யும். மார்ச்சு 10உ அளவில் தொடங்கியிருந்த காரியங்கள் நிறைவேறும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் பிப்ரவரி 12, 13, 16, 17, 18, 21, 22 மார்ச்சு 1, 2, 3, 4, 9, 10, 11, 12 தேதிகளில் நற்பலன் ஏற்படும். மார்ச்சு 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகள் மத்திமபலன் தரும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் $\frac{1}{4}$**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானம் கணிசமாக வரும். சகோதரர்கள் விசுவாசபான்மையில் இருந்து வருவர். மார்ச்சு 7உ செவ்வாய் மாறுதலினுல் ஓர் விபத்துவந்து தப்பும். பூமியில் இயந்திரசாதனங்களில் நற்பலன்வரும். அரசாங்க நிர்ப்பந்தத்தில் காரியங்கள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 12, 13, 14, 15, 19, 20, 24, 25 மார்ச்சு 3, 4, 5, 6, 12, 13 தேதிகளில் மிகுந்த நற்பலன்தரும். மார்ச்சு 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$**

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் கணிசமாக வரும். சகோதரருக்கு உயர்வுதரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரயோஜனம் மிகுந்து வரும். வீடு வாகன பிராப்தியில் சௌகரியம் அதிகம் தரும். புத்தி சாதுரியத்தினுல் காரியசாதனை ஆகும். பிப்ரவரி 14, 15, 16, 17, 18, 21,

22 26, 27 மார்ச்சு 5, 6, 7, 8, 13 தேதிகளில் காரியசித்தி பண ஆதாயம் மிக சௌகரியம் தரும். மார்ச்சு 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾**

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் மதிப்பாக வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப சுபமானவற்றில் செலவும் ஆகும் மார்ச்சு 7உக்கு முயற்சிக்கின்ற காரியங்களில் ஜெயம் தரும் பூர்வபொருளில் நற்பலன் வந்து சேரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 16, 17, 18, 19, 20, 24, 25, மார்ச்சு 1, 2, 7, 8, 9, 10, தேதிகளில் பண ஆதாயாதி நற்பலனையளிக்கும். பிப்ரவரி 12, 13, மார்ச்சு 11, 12, 13, தேதிகளில் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.**

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் மதிப்பாக வந்துசேரும் சகோதரருக்கு உயர்வுதரும். வித்தியாவியாபாராதிகளைத்துறைகளில் அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தும். ஓர் நவீன வஸ்துவின் பிராப்தியை அளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 12, 13, 19, 20, 21, 22, 23, 26, 27 மார்ச்சு 3, 4, 9, 10, 11, 12 தேதிகளில் மிகுந்த நற்பலன்களை அளிக்கும். பிப்ரவரி 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼**

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பாபி விருத்தியில் தன வரவுகள் மதிப்புடன் வந்துகொண்டிருக்கும். சகோதரர் விசுவாசம் பந்துமித்திரர்களின் அனுசரணை பலத்தரும். வித்தியா வியாபாராதி களைத்துறைகளில்கௌரவ ஸ்திதியை உண்டு பண்ணும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 12, 13, 15, 21, 22, 23, 24, 25, மார்ச்சு 1, 2, 5, 6, 11,

12, 13 தேதிகளில் மிகுந்த நற்பலன்களைத் தரும். பிப்ரவரி 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

**(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)**

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மார்ச்சு 7 உக்குச் சிவந்த வஸ்துவின் பிராப்தியைத்தரும் ஜீவனோபாயத்தில் நல்லன ஏற்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். பிப்ரவரி 14, 15, 16, 17, 18, 24, 25, 26, 27, மார்ச்சு 3, 4, 7, 8, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை அளிக்கும். பிப்ரவரி 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்

**11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் - பூரட்டாதி ¾**

**(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)**

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவரவுகள் வந்துகொண்டிருக்கும். சமச்செலவு ஆகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஜீவனோபாயத்தொழில் களில் நன்மைகளை ஏற்படுத்திவரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தெய்வபக்தி மேலிடும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். பிப்ரவரி 16, 17, 18, 19, 20, 26, 27, 28 மார்ச்சு 1, 2, 5, 6, 9, 10, 11 தேதிகளில் தனதாயம் நன்மதிப்பு தரும். பிப்ரவரி 21, 22, 23 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼– உத்திரட்டாதி – ரேவதி.**

**(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)**

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வரும். அடிக்கடி அவசியமானதாக கைப்பொருளும் சேர்ந்து செலவாகும். பூர்வ ஸ்திரப்பொருளில் மாறுதல் ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். பிப்ரவரி 12, 13, 19, 20, 21, 22, 28 மார்ச்சு 1, 2, 3, 7, 8, 12, 13 தேதிகளில் மிகவும் நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 24, 25 தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

# மாசி மாதச் சிறப்பு நாட்கள்

12—2—81 வியாழன், விஷ்ணுபதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். கும்பரவி 19 - 16 வேளூர்க் கிருத்திகை தருமபுரம் ஸ்ரீசண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம்.

16—2—81 திங்கள், பிரதோஷம்.

17—2—81 செவ்வாய், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் திருக்கடவூர் ஸ்ரீ கால சம்ஹாரமூர்த்தி அபிஷேகம்.

18—2—81 புதன், பௌர்ணமி விரத பூஜை. மாத பூஜையில் கிருத கம்பளம். ஆயில்ய விழா.

19—2—81 வியாழன், திருவையாறு திருக்குவளை, கும்பகோணம். கஞ்சனூர், காஞ்சிபுரம் முதலிய தலங்களில் மகதீர்த்தம். திருக்குவளையில் நெல் மஹோற்சவம்.

22—2—81 ஞாயிறு, சங்கடஹர சதுர்த்தி வேளூர் ஸ்ரீ சந்திரசேகரர் உத்ஸவாரம்பம். தருமையாதீனம் 17 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை. எறிபத்த நாயனார் குருபூஜை.

25—2—81 புதன், காலாஷ்டமி.

1—3—81 ஞாயிறு, சுரி நாயனார் குருபூஜை.

4—3—81 புதன். மஹாசிவராத்திரி பிரதோஷம் மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதருக்கு மஹாபிஷேகம் சீகாழி ஸ்ரீ உமாமகேசருக்கு மூன்றும் காலத்தில் புழுகாப்பு.

5—3—81 வியாழன், போதாயன அமாவாசை கோச்செங்கட்சோழ நாயனார் குருபூஜை.

6—3—81 வெள்ளி, அமாவாசை. துவாபரயுகாதி.

10—3—81 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரர் பூஜை.

11—3—81 புதன், வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். கிருத்திகை விரதம். பேரளம், உய்யக்கொண்டான் திருமலை பங்குனி உத்திர உத்ஸவாரம்பம்.

திருமையாதீன் வெளியீடுகள் :

## தமிழ்வளர்க்கும் தருமபுரம் ( தமிழ் )

விலை ரூ 5—00. ரெக்கார்டெட் டெலிவரி உள்பட அஞ்சற்செலவு 1—25.

## குருஞானசம்பந்தர் - மதுரையில் உள்ளொளி பெற்ற தத்துவஞானி ( ஆங்கிலம் )

விலை ரூ 5—00. ரெக்கார்டெட் டெலிவரி உள்பட. அஞ்சற் செலவு ரூ. 1—25.

இவ்விரு நூல்களும் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டின் நினைவாக வெளியிடப்பெற்றுள்ளன. வேண்டுவோர் மேலாளர், "ஞானசம்பந்தம்" பதிப்பகம்' தருமபுரம், மாயூரம் அஞ்சல், 609001 என்ற முகவரிக்கு M. O மூலம் தொகை அனுப்பிப்பெறலாம்.

## "ஞானசம்பந்தம்"

### தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா ( உள்நாடு ) | ... ரூ. | 10—00 |
| ஆண்டுச் சந்தா ( சிலோன் ) | ... ரூ. | 12—00 |
| ஆண்டுச் சந்தா (வெளிநாடு) | ... ரூ. | 18—00 |
| ஆயுள் சந்தா ( உள்நாடு ) | ... ரூ. | 100—00 |
| ஆயுள் சந்தா (வெளிநாடு) | ... ரூ. | 125—00 |

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம்,
மாயூரம்-609 001 தஞ்சை மாவட்டம்

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-2-81